ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

24.03.2010 - மலர் 07, இதழ் 03

## வெளியுலக தொடர்பில்லாத காட்டுக்குகை கிராமம்

## சூழல் மாசடைதல் எவ்வாறு நிகழ்கின்றது?

## நற்பண்புகளை கையாளும் வழிமுறைகள்

## உலகை போஷிக்கும் நதிகள்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எல்லைக் கலவரம்

இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கு ஒல்லாந்தர் கொடுப்பதற்கு இருந்த பிரதேசங்களைப் படைபலத்தால் கைப்பற்றுவதற்குரிய ஏற்பாடுகளை அவர் மேற்கொண்டார். ஆட்களை அனுப்பி அப்பிரதேசங்களை தீ வைத்து அழிக்கச் செய்தார். அதனால், ஒல்லாந்தர் சீதாவாக்கையை கைவிட்டுச் சென்றனர். இதற்கிடையில், செல்வந்தர்கள் ஒல்லாந்த வர்த்தக சங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பித்தனர். உண்மையில் கொழும்பு மந்திரி சபையில் உள்ளவர்கள் இவர்களுடன் மிக ஐக்கியமாக இருந்தனர். அவர்கள் அனுப்பும் கடிதங்களுக்கு செல்வந்தர்கள் பதில் அனுப்பினார்கள். அதில் மன்னனுக்கு சில குதிரைகளை

அனுப்பமுடிந்தால் மன்னன் மகிழ்ச்சி அடைவார் என குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன்படி, ஒல்லாந்தர்கள் சில குதிரைகளை மன்னனுக்கு அனுப்பினர். அத்துடன், ஒரு கடிதத்தையும் அனுப்பி வைத்தனர். அத்தோடு, தண்டிப்பதற்காக ஒல்லாந்தரிடம் அனுப்பப்பட்ட அம்பன்வெல ராலையை இராஜசிங்க மன்னனுக்கெதிரான ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த ஒல்லாந்தர் தீர்மானித்தனர். அவனை மிக நன்றாக உபசரித்தனர். எனினும், அதன்மூலம் கிடைத்த மன்னிப்பைப் பயன்படுத்தி அம்பன்வெல [illegible]

இதற்கிடையில், பல திசாவைமார்கள் நாட்டின் எல்லைக்குள் புகுந்தனர். அங்குள்ள மக்களுக்கு பெருந்தொல்லைகளைக் கொடுத்தனர். கலவரங்களை ஏற்படுத்தினர். ஒல்லாந்தருக்கு உணவு விநியோகிப்பதைத் தடுத்தனர்.

கி.பி 1680 ஆம் ஆண்டு மலர்ந்தது. ஆள்பதிவேன்ஹுன்ஸ் தனது பதவியை இராஜினாமா செய்து தாயகம் திரும்பினார். அவருக்குப் பதிலாக லோரன்ஸ் பீல் என்பவர் ஆள்பதியாக பதவி ஏற்றார். அவர் மன்னனுடன் சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினார். சிறைப்பிடித்தவர்களையும் பலவந்தமாக தடுத்து வைத்திருக்கும் தூதுவர்களையும் விடுதலை செய்யும்படி வேண்டி மன்னனுக்கு பரிசில்களை அனுப்புவதற்குத் தீர்மானித்தார். அலங்கரிக்கப்பட்ட கூடுகளில் இடப்பட்ட இரு சிங்கங்களும் பாரசீகக் குதிரைகள் இரண்டுமே அந்தப் பரிசுகளாக இருந்தன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சமூக விஞ்ஞான பொது அறிவுப்போட்டி:

# இவ்வருடத்திலிருந்து தேசிய மட்டத்தில் நடாத்தப்படவுள்ளது

பாடசாலை மாணவர்களிடையே வருடாந்தம் நடாத்தப்பட்டு வந்த மாகாண மட்டத்திலான சமூக விஞ்ஞான பொது அறிவுப்போட்டியை இந்த வருடத்திலிருந்து தேசிய மட்டத்திலும் நடாத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மும்மொழிகளிலும் நடாத்தப்படவுள்ள இப்போட்டியில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவர்கள் பங்குபற்றலாம். முதலில் பாடசாலை மட்டத்தில் போட்டிகள் நடாத்தப்பட்டுத் தெரிவாகும் மாணவர்கள், அடுத்து வலய மட்டம், கோட்ட மட்டம், மாகாண மட்டப் போட்டிகளினூடாக வெற்றி பெறுவதைப் பொறுத்து தேசிய மட்டப் போட்டியில் பங்கு பற்றும் வாய்ப்பைப் பெறுவர்.

தேசிய மட்டப் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மட்டப் போட்டியிலும் வெற்றி பெறும் போட்டியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. தேசிய மட்டத்தில் தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் சமகால தகவல்களைப் பல்வேறு வழிகளில் திரட்டுவதோடு, அதனை ஊக்குவித்து அதன் மூலம் கற்றல் திறமைகளை வளர்த்துக்கொள்ளல் போன்ற நோக்கங்களின் அடிப்படையிலேயே இப்போட்டியை தேசிய மட்டத்தில் நடாத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மூன்று வருடங்களின் பின்னர் யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா எதிர்வரும் 26 ஆம் திகதியிலிருந்து 28 ஆம் திகதி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற இருப்பதாக யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

2007,2008, 2009 ஆகிய மூன்று வருடங்கள் நடைபெறாமல் இருந்த இப்பட்டமளிப்பு விழாவில் இம்முறை இரண்டாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் பட்டங்களைப் பெறவுள்ளனர் என்றும் அறியவருகின்றது.

முதலாம் தவணை:

# பாடசாலை விடுமுறை ஏப்ரல் 6 ஆம் திகதியிலிருந்து



**பாடசாலைகளில் முதலாம் தவணைக்கான விடுமுறை எதிர்வரும் 6 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.**

**இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி மீண்டும் பாடசாலைகள் திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.**

**முதலாம் தவணையை ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு முன்னர் தீர்மானித்திருந்தபோதும், நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதை அடுத்து, அந்த விடுமுறையை எதிர்வரும் 6 ஆம் திகதியில் வழங்குவதற்கு தீர்மானித்ததாக கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.**

Vijey විජය
விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk




# கையெழுத்தை வைத்து பொய்யை இனங்காணலாம்

ஒருவரது கையெழுத்தைக் கொண்டு அவர் பொய் கூறுகின்றாரா? என்பதைக் கண்டறியலாம் என இஸ்ரேல் நாட்டின் ஹெய்பா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். 34 பேரை உட்படுத்தி ஆய்வொன்றை மேற்கொண்டதையடுத்தே, இந்த உண்மை வெளியாகியுள்ளது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களுக்கு முதலில் இரண்டு பந்திகள் அளவு தகவலை மனப்பாடம் செய்ய வைத்துள்ளனர். பின்பு தாம் மனப்பாடம் செய்ததை அவர்களின் கையெழுத்து தெளிவாகப் பதியும்படி Wireless electronic பேனாக்களைக் கொண்டு எழுதும்படி பணித்துள்ளனர். பின்னர், அந்த கையெழுத்துக்கள் கணினி மற்றும் Touch Sensitive Pad எனும் கருவி மூலம் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இதன்போது ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் சிலர் தமக்கு மறந்து போன இடங்களில் குறிப்பிட்டிருக்கும் கையெழுத்துக்களில் மாற்றங்கள் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

தவறான விடயங்கள் உள்ள இடங்களில் கையெழுத்து அழுத்தமாகவும் சீரற்றதாகவும் வார்த்தைக் கோவையின்றி, நீளமானதாகவும் காணப்பட்டுள்ளதோடு, உயரமான கையெழுத்துக்களில் எழுதப்பட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த முறையைப் பின்பற்றி ஒருவர் குறிப்பிடும் தகவல்கள் பொய்யா? உண்மையா? என்பதைக் கண்டறியலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். சாதாரணமாக இந்த மாற்றங்களை வெற்றுக் கண்களாலும் அவதானிக்கலாம் என்று குறிப்பிடும் ஆய்வாளர்கள், எனினும் துல்லியமான முடிவுக்கு கருவிகள் மூலம் ஆராய்வது சிறந்த பெறுபேறினை வெளிப்படுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

# பல்கலைக்கழக பகிடிவதைக்கு ஒத்துழைக்கும் மாணவர்களுக்கு எதிராக ஒழுக்க, சட்ட நடவடிக்கை



இனிவரும் காலங்களில் பல்கலைக்கழகத்துக்கு அனுமதித்துக் கொள்ளப்படுகின்ற சகல மாணவர்களிடமும் அவர்களின் பெற்றோர்களிடமும் இருந்து பகிடிவதை வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதிலிருந்து விலகியிருப்பதாக உடன்பாட்டு ஒப்பந்தமொன்றில் கையெழுத்துப் பெற்றுக்கொள்ளுமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சுற்றறிக்கையினூடாக பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதைக்கு ஒத்துழைக்கும் மாணவர்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் உரிமை புதிய சுற்றறிக்கையூடாக பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, அவ்வாறான மாணவர்களின் வகுப்பு அனுமதிக்கு தடைவிதித்தல், பல்கலைக்கழக வளாகத்துக்குள் பிரவேசித்தலுக்குத் தடைவிதித்தல் மற்றும் விடுதி வசதிகளை வழங்காதிருத்தல் போன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கான உரிமை பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.


10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோம் வழங்கப்படும்.
எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேளை வாய்ப்பை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20ரூ பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்பாதையில் அமைந்துள்ளதால் நமது நாட்டுக்கு நேர்ந்தவை...

இலங்கை தெற்காசியாவில் உள்ள ஒரு தீவாகும். இது பண்டைய காலம் தொடக்கம் முக்கிய வர்த்தக நிலையமாகவும் திகழ்ந்துள்ளது. இயற்கை வளங்களாக மண், முத்து மாணிக்கங்கள், காரீயம் ஆகிய கனிய வளங்களும் விலங்குகளும் விசேட தாவரங்களும் இலங்கைக்கு உரியதாக இருந்தன.

இயற்கை வளங்களும் நாட்டின் அமைப்பும் உள்ளக நில அமைப்பும் எமது நாட்டின் வரலாற்றில் பலவித அழுத்தங்களுக்கு காரணமாக அமைந்தன. அதுபற்றி சிறிது நோக்குவோம்.



## வர்த்தக தொடர்பும் அரச நெருக்கடியும்

* வெளிநாட்டு வர்த்தகர்கள், இங்கு குடியிருப்புகளை அமைத்துக்கொண்டு தமது அரசுகளை நிறுவிக்கொண்டனர்.
* வணிகத் தொடர்புகள் ஒருசில அரசியல் பிரச்சினைகளுக்கு காரணமாகின.

எடுத்துக்காட்டாக அனுராதபுரத்தை ஆண்ட சுரதிஸ்ஸ அரசனிடமிருந்து அரசு கைப்பற்றப்பட்டது. இதனை இந்நாட்டுக்கு வந்த குதிரை வர்த்தகம் செய்பவர் ஒருவரே மேற்கொண்டார்.

* முதலாவது பராக்கிரமபாகு மன்னன் பர்மாவை ஆக்கிரமித்ததற்கு காரணம் இரு நாடுகளுக்கும் இடையில் நடைபெற்ற வர்த்தக நடவடிக்கைகளுக்கு பர்மா இடைஞ்சலாக அமைந்ததேயாகும்.
* கறுவா, ஏலம், வாசனைத் திரவியங்களைத் தேடி இலங்கை வந்த போர்த்துக்கேய, ஒல்லாந்த,ஆங்கிலேய, ஐரோப்பிய இனத்தவர்கள் இந்நாட்டைக் கைப்பற்றி அரசியல் அதிகாரம் பெற முயன்றதற்குக் காரணம் இந்நாட்டின் அமைப்பு அரசியல் கேந்திர முக்கியத்துவம் பெற்றதனாலாகும்.

கடலில் அதிகாரம் வாய்ந்தவர்களாக இருந்த அவர்கள் இலங்கையை கேந்திர நிலையமாக்கிக் கொண்டனர். இதன்படி, இந்தியாவின் மேற்குக் கரைப்பகுதியைப் போன்று, கிழக்குப் கரைப்பகுதியின் மீதும் சர்வ அதிகார செல்வாக்குச் செலுத்தினர்.

இயற்கை வளங்கள் மற்றும் கேந்திர முக்கியத்துவ அமைப்பு என்பன இலங்கையின் கரையோரப் பகுதிகளை வெளிநாட்டவர்கள் கைப்பற்றக் காரணமாக அமைந்தன.



## வர்த்தக ரீதியிலான நன்மைகள்

இந்நாட்டுக்கு வந்த வெளிநாட்டு வர்த்தகர்களிடமிருந்து ஏராளமான வரிகள் கிடைத்தன. முதலாவது கஜபாகு மன்னனின் 'கொடவாய' கல்வெட்டு, முதலாவது பராக்கிரமபாகுவின் நயினாதீவு தமிழ் கல்வெட்டு, லீலாவதி அரசியின் அனுராதபுரம் புளியங்குளம் கல்வெட்டு, இரண்டாவது பராக்கிரமபாகு மன்னனின் தெவிநுவர கல்வெட்டு, கம்பளை காலப்பகுதியைச் சேர்ந்த 'லங்காதிலக' மலைக் கல்வெட்டுக்களில் இவை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

* இங்கு வந்த ரோமானிய வர்த்தகர்கள் 'சொலிடுஸ்' எனும் ரோம நாணயத்தினையே பயன்படுத்தினர்.
* ஈரான் நாட்டு வர்த்தகர்கள் 'ஓனார்' எனும் நாணயத்தைப் பயன்படுத்தினர்.
* ஐரோப்பியர்கள் வணிக நடவடிக்கைகளுக்காக இலங்கை வந்த பின்னர் தங்கமா, லாரீன், தொயித்து, துட்டு, பதாக, பவுண், சிலிங், பென்ச மற்றும் ரூபா ஆகிய நாணயக் காசுகளின் பயன்பாடு ஆரம்பமாகின.

கடல் பாதையில் இலங்கை அமைந்துள்ளதால் ஏற்பட்ட வர்த்தகத் தொடர்புகளினால் பலதரப்பட்ட நாணயங்கள் இலங்கையில் அறிமுகமாயின.

## சமூக ரீதியில்

* எமது நாட்டின் முஸ்லிம் இனத்தவர்கள், இலங்கை கடல்வழிக் கேந்திர நிலையம் என்ற அடிப்படையில் இங்கு வந்தவர்களாவர். இவர்களின் பூர்வீகம் அரபு தேசமாகும்.
* போர்த்துகேயர்களும் ஒல்லாந்தர்களும் வணிகர்களாகவே இலங்கை வந்தனர். பின்னர் அவர்கள் நாட்டில் நிலவிய பலவீனமான அரசியல் நிலையைப் பயன்படுத்தி கரையோரத்தைக் கைப்பற்றினர். இன்று எமது சமூகத்தின் பங்காளர்களாக இருக்கும் பறங்கி இனத்தவர்கள் இவர்களின் முன்னோர்களாவர். அன்று முதல் இவர்கள் கொண்டு வந்த பழக்கவழக்கங்கள், நடைமுறைகள் இன்று சற்று மாறுபட்டேனும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

## மதம்

* இந்நாட்டிற்கு வந்த வெளிநாட்டு வர்த்தகர்கள் தமது மதத்தை அவ்விதமே பின்பற்றினர்.
* கி.பி 500 இல் அனுராதபுரத்தில் ஈரான் நாட்டு வர்த்தகர்கள் சிலர் இருந்தனர். இவர்கள் நெஸ்டோரியா பிரிவினைச் சேர்ந்த கிறிஸ்தவர்களாவர்.
* கி.பி 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த 'திரியாய' கலாசாரத்தைக் கொண்ட கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அங்கு அமைக்கப்பட்டுள்ள கிரிகண்டக்க விகாரையை தபுஸ்ஸு பல்லுக்க எனும் வர்த்தகர்கள் கட்டியுள்ளனர்.
* இங்குள்ள கத்தோலிக்க மற்றும் இதர கிறிஸ்தவ ஆலயங்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள் வர்த்தக நோக்கங்களுக்காக இலங்கை வந்தவர்களால் அமைக்கப்பட்டவையாகும்.

(இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 3483

ஆ.பிரியதர்ஷன்,
தரம் - 1D,
இந்துக் கல்.,
கொழும்பு.



அங்.இல: 3484

எம்.முஷ்தாக்,தரம் - 7,
ஹிரிம்புற
சுலைமானியா ம.வித்.,
காலி.



அங்.இல: 3485

கு.மகிழினி,
தரம் - 8,
யா/சாவகச்சேரி இ.கல்.,
சாவகச்சேரி.



அங்.இல: 3486

ந.கஜேந்திரன்,
தரம் - 4A,
புனித ஜோன் பொஸ்கோ
வித்., யாழ்ப்பாணம்.



அங்.இல: 3487

எம்.நிருதிகா,
தரம் - 10,
கா/தல்கஸ்வலை
த.க.வித்.,தல்கஸ்வலை.



அங்.இல: 3488

எம்.பர்ஹான்,
தரம் - 8B,
அல்-ஹம்றா ம.வித்.,
திருகோணமலை.



அங்.இல: 3489

கோ.குகதனுபன்,
உயர் தரம்,
வெஸ்லி உயர் தர பாட.,
கல்முனை.



அங்.இல: 3490

யாசிர் அரஃபாத்,
தரம் - 9A,
அல்-அதான் மு.ம.வித்.,
பதுளை.



அங்.இல: 3491

எஸ்.சதீஸ்குமார்,
தரம் - 7B,
ஸ்ரீ இராமகிருஷ்ணா
த.வித்., கண்டி.



அங்.இல: 3492

சி.தனுஷா,
தரம் - 6,
மடுக்கரை அ.த.க.பாட.,
மன்னார்.



அங்.இல: 3493


ஹஸன் ஹனீபா,
தரம் - 6C,
ஹைலன்ஸ் கல்.,
ஹட்டன்.



அங்.இல: 3494

எம்.முன்சிப்,
தரம் - 9,
அஸ்ஹர் ம.கல்.,
அக்குறனை.


# இயற்கைச் செல்வம் 'ஆம்பர்'



'ஊசியிலை மரம்', 'தேவதாரு' போன்ற மரங்களிலிருந்து வடியும் ஒருவகைப் பிசுபிசுப்பான திரவம், 'ரெசின்' எனப்படுகிறது.

'வார்னிஷ்', 'மெருகெண்ணெய்' போன்றவற்றின் தயாரிப்பில் 'ரெசின்' பயன்படுத்தப்படுகிறது. உலகின் சில பகுதிகளில், குறிப்பாக 'பால்டிக் கடலை' அண்டிய பகுதியில், கற்படிவமாக 'ரெசின்' பெருமளவில் காணப்படுகிறது. ஊசியிலை மரக் காடுகள் நீரில் மூழ்கியபோது, 'ரெசின்', கற்படிவமானது. மூழ்கிய மரங்கள், களிமண்ணுக்குள் பல லட்சம் ஆண்டுகள் புதையுண்டு கிடந்து கடினமான கட்டிகளைப் போல மாறின. அதுவே 'ஆம்பர்' எனப்படுகின்றது.

சிவப்பு முதல் மஞ்சள் வரை பல்வேறு வண்ணங்களில் 'ஆம்பர்' காணப்படும். எப்போதும் இதற்கு அதிக கேள்வியுண்டு. பண்டைக்காலத்தில், தீய ஆவிகளைத் துரத்தவும், நோய்களிலிருந்து காப்பாற்றவும் அதிர்ஷ்டப் பொருளாகவும் 'ஆம்பர்' அணியப்பட்டது. தற்போது இது நகைகளில் பதித்து அணியப்படுகிறது.



சில நேரங்களில் ரெசினுக்குள் பூச்சிகள் சிக்கிக் கொண்டிருப்பது உண்டு. அவ்வாறு பூச்சிகள் சிக்கிக் கொண்ட 'ஆம்பர்' துண்டுகளுக்கு மதிப்பு மிக அதிகம். குறிப்பாக, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த உயிரினங்களைப் பற்றி ஆராயும் விஞ்ஞானிகள் இவற்றை மதிப்பு மிக்க பொருளாகக் கருதுகின்றனர். நிலை மின்சாரத்துக்கான ஆரம்பகால ஆய்வுகள், கி.மு 500 இல் ஆம்பரில் செய்யப்பட்டன. 'ஆம்பர்' என்பதைக் குறிக்கும் கிரேக்க வார்த்தையான 'எலக்ட்ரான்' என்பதில் இருந்துதான் மின்சாரத்தைக் குறிக்கும் 'எலக்ட்ரி சிட்டி' என்ற வார்த்தை பிறந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வ
# நற்பிர

"பிள்ளைகளே, விளையாடியது போதும்.... உள்ளே வந்து முகம், கைகால் கழுவிப் படிப்பில் கவனம் செலுத்துங்கள்" என்று அம்மா அழைத்தார்.

சுமன் அழுதுகொண்டே தாத்தாவிடம் ஓடி வந்தான். "பாருங்கள் தாத்தா. விளையாடுவது தவறா? படிக்கின்ற பிள்ளை மட்டும்தானா நல்ல பிள்ளை?" என்று கேட்டான்.

"இல்லை இல்லை. நல்ல பிள்ளை என்பதற்கு அதைவிட பல வித்தியாசங்கள் உள்ளன. அவர்களிடம் வித்தியாசமான குணங்கள் காணப்படும்" என்று சுமனின் தலையைக் கோதிவிட்டபடி தாத்தா கூறினார். நல்ல பிள்ளைகள் யார் அவர்களிடம் எப்படியான பண்புகள், செயற்பாடுகள் காணப்படும் என்று பார்ப்போம்.

நல்லொழுக்கம், நற்குணங்கள் என்பன ஒருவரிடம் காணப்பட வேண்டிய விலைமதிக்க முடியாத சொத்தாகும். நல்லொழுக்கம், நற்குணங்கள், நன்னடத்தையுடையவர்களுக்கு மொத்த சமூகமும் கௌரவமளிக்கின்றது.

நல்லொழுக்கம், நற்குணங்கள், நல்ல நடத்தையுள்ளவர்கள் சிறந்த பிரஜைகளாக மதிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு முழு சமூகமும் கௌரவமும் ஆதரவும் அளிக்கும். பெற்றோர், மூத்தோர் ஆசிரியர்களுக்கு பணிதல் நல்ல பிள்ளைகளின் பண்புகளாகும்



## 1 கற்றலுக்கு முதலிடம்



ஒரு குழந்தையின் பிரதான பொறுப்பாக இருக்கவேண்டியது கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகும். கற்பதை நல்ல முறையில் மனதில் இருத்தி அதன்படி செயற்படவேண்டும். கற்றலானது ஒருவரது வாழ்நாள் முழுவதும் பூர்த்தியடையாத ஒன்றாகும். எனினும், பாடசாலைப் பருவம் முக்கியமானதாக அமைவதால் பாடசாலையில் கற்கும் காலப்பகுதியில் கூடுதல் கவனமும் அக்கறையும் செலுத்தவேண்டும்.

## கேள்வி கேட்கும் ஆற்றல்

ஆசிரியர், பெற்றோர், வயதில் மூத்தவர்கள் பல விடயங்களைக் கற்பிப்பார்கள், சொல்லித் தருவார்கள். ஆனால், கற்றுத்தருகின்ற, சொல்லித் தருகின்ற அனைத்தையும் அவ்வாறே புரிந்துகொள்ளவோ, நினைவில் வைத்திருக்கவோ அனைவராலும் முடிவதில்லை. சிலநேரம் அவை தொடர்பாக குளறுபடிகள் ஏற்படலாம். குளறுபடி, சஞ்சலம், தெளிவின்மையைப் போக்க ஒரே வழி குறிப்பிட்ட விடயம் பற்றி மேலதிக கேள்விகளைக் கேட்டு தெளிவு பெறுவதாகும். தெரியாத விடயங்கள் தொடர்பாக தெரிந்தவர்களிடம் ஆசிரியர்களிடம் மூத்தவர்களிடம் கேள்வி கேட்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ளவேண்டும். எந்தவொரு தெரியாத விடயத்தையும் முழுமையாகவும் முறையாகவும் தெளிவாகவும் விளங்கிக்கொள்ள கேள்விகள் கேட்கவேண்டும். இது எந்தவொரு கற்றல் நடவடிக்கைக்கும் அவசியமான கற்றலாகும்.



## திட்டமிடல் அவசியம்

நாம் எமது அன்றாட நடவடிக்கைகள் தொடர்பாக திட்டமிட வேண்டும். நேரசூசி (Time Table) ஒன்றை வகுத்து அதன்படி செயற்படப் பழகவேண்டும். சில சந்தர்ப்பங்களில் நேரசூசிக்கமைய செயற்படுவது கஷ்டமாக இருந்தாலும் திட்டமிட்ட அடிப்படையில் இயங்குவதால் அதிக நன்மையடையலாம்.

அவ்வாறில்லாவிட்டால் எமது வாழ்க்கையில் ஏற்படும் கால, நேர விரயத்தைத் தடுக்க முடியாது போய்விடும். காலை எழுந்தது முதல், இரவில் படுக்கைக்கு செல்லும் வரை உள்ள கடமைகளை அடையாளப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, திட்டமிடலின் அடிப்படையில் செயற்பட்டால் கிடைக்கின்ற 24 மணித்தியாலத்தில் நாம் உச்சப் பயனை அடையக்கூடியதாக இருக்கும். பிற்காலத்தில் சிறந்த அறிவியல் மேதையாவதற்கு இத்திட்டமிடல் வழி சமைக்கும்.




## சிறுவர் உரிமைகளை அறிதல்

வளர்ந்தவர்கள் அனுபவிப்பது போன்று சிறுவர்களுக்கும் பலவிதமான உரிமைகள் உள்ளன. இந்த உரிமைகள் தொடர்பாக அறிந்திருப்பது அவசியமாகின்றது. சிறுவர்கள் பல சந்தர்ப்பங்களில் தொந்தரவுகளுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாக நேரிடுகின்றது. அந்த சந்தர்ப்பங்களில் எடுக்க வேண்டிய எதிர் நடவடிக்கை என்ன? அதனோடு சம்பந்தப்பட்ட உரிமைகள் யாவை? என்பனவற்றை அறிந்திருக்கவேண்டும்.



## நூல்களை வாசிக்க வேண்டும்

நல்ல பிள்ளையாகவும் அறிஞராகவும் வருவதற்குரிய முக்கியமான வழிமுறை அறிவுசார் கற்றல் நடவடிக்கையுடன் தொடர்புடைய நூல்களை வாசிப்பதாகும். அந்தந்த வயதுப் பருவத்தினர் அவர்களால் புரிந்துகொள்ளக்கூடிய விடயங்கள் தொடர்பான நூல்களை வாசிக்க வேண்டும்.

'வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது' என்றும் கூறப்படுகின்றது. எந்தப் புத்தகங்களை வாசிப்பது என்று தீர்மானிக்கமுடியாத போது மூத்தவர்களிடம் அது பற்றிக் கேட்டறிந்து கொள்ளலாம்.



## பொதுப் பணிகளில் ஒத்துழைப்பு

சிறந்த குழந்தை வீட்டில் மட்டுமல்லாது சமூகத்திலும் பிரகாசிக்கக்கூடியதாக இருக்கும். சமூக நலன், பொது நோக்கம் கருதிச் செயற்படும் உணர்வு ஏற்படவேண்டும். சமூக நலன் கருதிய நடவடிக்கைகளில் சிறுவயது முதல் ஈடுபடுதல், சிரமதானப் பணிகளில் பங்குபற்றுதல், பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல், ஏனையவர்களுக்கு உதவி ஒத்தாசை புரிதல் என்பன நற்பண்புகளாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ழி நடப்போம் ஜைகளாவோம்






## சுற்றாடலுக்கு பிரியமுள்ளவர்களாவோம்

மரம், செடி, கொடிகள், பறவைகள், மிருகங்கள், உயிரினங்கள் இல்லாத நிலை ஏற்படுமானால் அழகிய மனோரம்யமான சூழல் எமக்குக் கிடைக்காமல் போய்விடும். இந்த பூமியில் உள்ள அனைத்தும் இறைவனால் எமக்கு வழங்கப்பட்ட அருட்கொடைகளாகும். அவற்றைப் பாதுகாத்துக்கொள்வது எமது பொறுப்பாகும். நாம் சுற்றாடலைப் பாதுகாப்பது போன்று என்றும் சுற்றாடலில் அன்பு கொண்டவர்களாக, அக்கறை உள்ளவர்களாக இருக்கவேண்டும். அழகிய சுற்றாடலின் மனோரம்யத்தை அடிக்கடி ரசிப்பவர்களாக இருக்கவேண்டும். அதன் மூலம் எமது மனஅழுத்தம் குறைவடைந்து மன நிம்மதிக்கு வழிபிறக்கும். வாழ்க்கையில் புதுத் தெம்பும் உற்சாகமும் பிறக்கும் அத்துடன், சுற்றாடலில் வாழும் உயிரினங்கள் மீது அன்பு, கருணை காட்டவேண்டும். அவற்றின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு தடையாக இருக்கக்கூடாது.

இவ்வாறு பொறுப்புணர்வுடன் செயற்படும்போது உங்களிடம் அதிகமான திறமைகள் வெளிப்படும். நீங்கள் உங்களை அறியாமல் வாழ்க்கையில் முன்னேறும் அறிகுறிகள் தென்படும். பாடசாலையிலும் சூழலில் சமூகத்திலும் நீங்கள் சிறந்த வழிகாட்டியாகவும் பங்குபற்றுனராகவும் தலைவராகவும் வருவீர்கள். அதுவே உங்கள் வாழ்வின் உன்னத வெற்றியாகும். இத்தகைய குழந்தைகளே மக்கள் மத்தியில் பிரபல்யம் உடையவர்களாக மாறுகின்றனர். சுமுகமாகவும் நட்புறவுடனும் நடந்து சமாதானத்தின் காவலனாகவும் மிளிர்வீர்கள். இவர்களே எதிர்கால தலைவர்களாவர். இத்தகைய பண்புகள் உடையவர்களே நல்ல குழந்தைகள்.

## இடைவேளை

ஓய்வாக இருப்பது, ஓய்வெடுப்பது என்பது நேரத்தை வீண் விரயம் செய்வதாகப் பொருள்படாது. மனித வாழ்வில் ஓய்வு மிக அத்தியாவசியமானதாகும். ஓய்வாக இருக்கும்போது நூல்களை வாசிக்கலாம். நல்ல விளையாட்டுக்களில் ஈடுபடலாம். வீட்டுத்தோட்டத்தில் மலர்ச்செய்கையில் ஈடுபடலாம். இவ்வாறான ஓய்வு மனதுக்கு மகிழ்ச்சியையும் வேலைப்பளுவால் ஏற்படும் சுமைகளையும் குறைத்து உடலுக்கு உற்சாகத்தைத் தரும்.



## விடயத்தோடு சம்பந்தப்பட்டவிடயங்கள்/ நடவடிக்கைகள்

எந்நேரமும் புத்தகத்தில் மூழ்கி படிப்பவர்களாக இருப்பவர்கள்தான் சிறந்த பிள்ளைகள் என்று சிலர் கருதுகின்றனர். இது தவறான கருத்தாகும். பாடம், கற்றல் என்பவற்றுக்கு அப்பாற்பட்ட பயனுள்ள விடயங்களுடனும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளல் அவசியமாகின்றது. அப்போதுதான் கற்றலுக்கு அப்பாற்பட்ட திறன் விருத்தியும், ஆளுமை வளர்ச்சியும் சிந்தனை செய்யும் ஆற்றலும் வளர்ச்சியடைகின்றது. கலைச்செயற்பாடுகள், பொதுநலப் பங்களிப்பு, சிரமதானப் பணிகள், பிறருக்கு உதவுதல் என்பன இத்தகைய துறைச் செயற்பாடுகளாகும்.

இதன் ஊடாக சமூகத்தில் ஐக்கியம், ஒத்துப்போதல், ஒன்றித்து வாழ்தல், தீர்மானம் எடுக்கும் ஆற்றல், கூட்டாகச் செயற்படுதல், சவால்களை வெற்றி கொள்ளல், தளரா மனப்போக்கு போன்ற திறமைகள் வளர்ச்சியடைகின்றன. இந்த திறமைகள் எதிர்கால வாழ்வை வளப்படுத்தி முன்னேற்றத்திற்கு வழிவகுப்பவைகளாகும்.





## நல்லொழுக்கத்தைக் கற்றுக்கொள்ளல்

நல்லொழுக்கம் மனிதனுக்கு மானத்தை மறைக்கும் ஆடை போன்றதாகும். நல்லொழுக்கம், நற்குணங்கள் கொண்ட பிரஜைகளுக்கு முழுச் சமூகமுமே மதிப்பளிக்கின்றது. அன்பு காட்டுகின்றது. வயதில் மூத்தவர்கள், ஆசிரியர்கள், பெற்றோரைக் கண்ணியப்படுத்தல், கௌரவித்தல் என்பன நல்ல குழந்தைகளிடம் காணப்படக்கூடிய நற்பண்புகளாகும். பிறருக்கு உதவி செய்தல் பிரதான பண்பாகும். மூத்தவர்களின் சொற்படி நடப்பது போன்று, தெரியாதவற்றை அவர்களிடம் கேட்டு கற்றுக்கொள்ளவும் வேண்டும்.



## வீட்டு வேலைகளில் உதவுதல்

அனேகமாக வீடுகளில் வேலைகளைத் தீர்மானிப்பது, மேற்கொள்வது பெற்றோர்களாவர். அவர்களது வேலைகளுக்கு குழந்தைகளும் உதவி, ஒத்தாசை வழங்கலாம். அவர்களோடு கூட்டாக இருந்து வேலைகளைத் திட்டமிடலாம். உங்களது ஆலோசனைகளையும் தெரிவிக்கும்போது அவை சரியாக இருந்தால் அவற்றை ஏற்று செயல்படுத்தும்போது உங்களுக்கும் மகிழ்ச்சியாக இருக்கும்.



## தமது பணிகளைத் தாமே செய்தல்

சிறந்த தேகாரோக்கியமுடைய ஆற்றல்மிகு குழந்தைகள் தங்கள் வேலைகளை பிறர் உதவியின்றி தாமாகவே செய்து கொள்வார்கள். சோம்பல், உதாசீனம், புறக்கணிப்பு என்பன இல்லாதவர்களாக தமது காரியங்களை உற்சாகத்துடன் தாமே செய்வார்கள். உடை அணிதல், சுத்தம் செய்துகொள்ளல் என்பவற்றை பெற்றோரைக் கஷ்டப்படுத்தாமல் தாமே செய்து கொள்வார்கள். ஆரம்பத்தில் பெற்றோர் அவர்களுக்கு ஒவ்வொரு செயல் குறித்தும் அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கும்போதே இது சாத்தியமாகின்றது.



அமீர் ஹுசைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தஜிகிஸ்தான்




மேற்கு டுஷான்பேயின் தோற்றம்
தேசிய இலச்சினை

**அரசு:** ஒரு சட்ட சபைகொண்ட பல கட்சிக் குடியரசு.

**சுதந்திரம்:** கி.பி 875 இல் சமனிட் சக்கரவர்த்தியால் ஸ்தாபிக்கப்பட்டது. சுதந்திரப் பிரகடனம் - 1991 செப்டெம்பர் 9. சுதந்திர ஆட்சி பூர்த்தி - 1991 டிசம்பர் 25.

**தேசிய பெயர்:** ஜம்ஹுூரி டொஜிகிஸ்டன் (தஜிகிஸ்தான் குடியரசு).

**அதிபர்** (1992): இமாமலி ரஹ்மான்.

**பிரதமர்** (1999): ஒகில் ஒகிலோங்.

**எல்லைகள்: மேற்கு** மற்றும் **வடக்கு**-உஸ்பெகிஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான்; **கிழக்கு**-சீனா; **தெற்கு**-ஆப்கானிஸ்தான்.

## தரைத்தோற்றம்

நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 93% மானது மலைகளைக்கொண்ட உயர்நிலமாகக் காணப் படுகின்றது. இது பமீர் மேட்டுநிலத்தின் வட பகுதியிலிருந்து தென் கிழக்கு வரையுள்ள நீண்ட பகுதியை தன்னகத்தே கொண்டுள்ளது. இங்கு மேலும் சமவெளிகளும் பள்ளத்தாக்குகளும் காணப்படுகின்றன.




இங்குள்ள நதிகளில் சிர் டார்யா, அமு டார்யா, வாக்ஷ், பான்ஜ், பமீர் மற்றும் பார்டாங் ஆகியவை குறிப்பிடத்தக்கன. கிழக்கு மலைகளில் பனிப்பாறைகளும் பல ஏரிகளும் காணப்படுகின்றன.'பெட்ச்சென்கோ' பனிப்பாறையானது 700 ச.கிலோமீற்றர் பரப் பளவைக்கொண்டது. இதுவே துருவங்களுக்கு வெளியே உள்ள உலகின் மிகப்பெரிய பனிப்பாறை ஆகும்.



**மொத்த நிலப்பரப்பு:** 55,251 ச.மைல் (143,100 ச.கி.மீற்றர்).

**மிக உயரமான சிகரம்:** இஸ்மாய்லி சொமோனி-24,589 அடி (7495 மீற்றர்).

**தாழ் மையம்:** சிர் டார்யா நதி.

**நிலப்பிரிவுகள்:** 3 மாகாணங்கள்.

**மக்கள் தொகை** (2009): 7,349,145.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** டுஷான்பே.

**ஏனைய பெரிய நகரம்:** கோட்செண்ட்.


இஸ்மாய்லி சொமோனி மலைச்சிகரம்

**நாணய அலகு:** சொமோனி.

**இணையத்தளக் குறியீடு:** .tj

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 992.

**மொழிகள்:** தஜிக் (உத்தியோகபூர்வ மொழி), அரச மற்றும் வர்த்தகத்துறையில் ரஷ்யன் மொழி பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது.

**இனங்கள்** (2000): தஜிக் 79%,உஸ்பெக் 15.3%, ரஷ்யன் 1.1%, கிர்கிஸ் 1.1%, ஏனையவை 2.6%.

**சமயங்கள்** (2003): இஸ்லாம்-சுன்னி 85%; ஷியா 5%, ஏனையவை 10%.

**எழுத்தறிவு வீதம்** (2003): 99%.

**தேசிய சின்னங்கள்:** மரம், மலர், பறவை, மிருகம், விளையாட்டு என எதுவும் பிரகடனப் படுத்தப்படவில்லை.

## லத்தீன் மொழியிலான தேசிய கீதம்

Diyori arjmandi mo
Ba baxti mo sari azizi tu baland bod,
Saodati tu, davlati tu begazand bod.
Zi durii zamonaho rasidaem,
Ba zeri parchami tu saf kashidaem,
kashidaem.... என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

கி.மு 333 ஆண்டில் மகா அலெக்சாண்டர் இப்பகுதியை தனது நிர்வாகத்தின்கீழ் வைத்திருந்தான். 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டுகளில் அரேபியர்களின் செல்வாக்கால் இங்கு இஸ்லாம் பரவியது. 1860 இல் ரஷ்யா இப்பகுதியை உள்வாங்கும் வரை உஸ்பெகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானால் ஆளப் பட்டது.

1924 இல் சோவியத் யூனியனின் ஒரு பகுதியாகி, 1929 இல் சோவியத் சமவுடமைக் குடியரசின் சோவியத்துக்களில் ஒன்றாகியது. 1991 டிசம்பர் 25 ஆம் திகதி சோவியத் ரஷ்யாவிடம் இருந்து சுதந்திரம் பெற்றது.1992 நொவெம்பரில் அதிபர் ஆட்சிமுறையை அகற்றி ஒரு நாடாளுமன்றக் குடியரசை நிறுவ நாடாளுமன்றம் முடிவு செய்தது. 1993 ஜனவரியில் கம்யூனிஸ்ட் ஆதரவு பெற்ற அரசு பதவிக்கு வந்தது. 1994 இல் இஸ்லாமிய தீவிரவாதிகளின் போராட்டம் ஆரம்பமாகியது. இதனால், உள்நாட்டுப் போர் ஆரம்பமாகி, 1997 இல் நிறைவு பெற்றது.


ஜனாதிபதி


பிரதமர்

## காலநிலை

தஜிகிஸ்தானிலுள்ள உயர்மலைகளின் செல்வாக்கு காலநிலையில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. தென் மேல் தாழ்நிலங்களில் மாத்திரமே வெப்பமான வறண்ட காலநிலை நிலவுகின்றது. உயர் மலைப் பிரதேசங்களில் மாரியில் நீர் உறைநிலையை அடையும். இங்கு கோடையில் (-50)°F வெப்பமும் மாரியில் (-25)°F வெப்பமும் காணப்படுகின்றது.

## கலாசாரம்

பல்லாயிரக்கணக்கான வருடங்களாக கட்டி எழுப்பப்பட்ட ஒரு கலாசாரமே இங்கு நிலவுகின்றது. இக்கலாசாரத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவை பிரதேச அடிப்படையிலேயே பிரிவுறுகின்றன. நகரப் பிரதேசங்கள், உயர்மலைப் பிரதேசங்கள் என பிரதேச அடிப்படையிலான கலாசார மாறுபாடுகள் இங்கு காணப்படுகின்றன.


சிர் டார்யா





டுஷான்பே விமான நிலையம்

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (1997): **பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்**-363,000; **செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்:** 2500. **வானொலி நிலையங்கள்** (2002): AM 8, FM 10, SW 2. **தொலைக்காட்சி ஒளிபரப்பு** (2001):13. **இணையத்தள வழங்குனர்கள்** (2002): 4; **இணையத்தளப் பாவனையாளர்கள்:** 5,000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்:** 482 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (2000): 27,767 கி.மீ. **துறையும் துறைமுகங்களும்:** இல்லை. **விமான நிலையங்கள்** (2002): 66.

## பொருளாதாரம்

**விவசாயம்** (விளைநிலம் 7%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** பருத்தி, தானியங்கள், பழங்கள், மரக்கறி வகைகள், மாடு, ஆடுகள், செம்மறி ஆடுகள். **தொழிலாளர் தொகை** (2007): 2.1 மில்லியன் (இதில் விவசாயம் 67.2%, கைத்தொழில் 7.5%, சேவைகள் 25.3%). **வேலையற்றோர்:** 2.4%. **கைத்தொழில்கள்:** அலுமினியம், ரசாயனப் பொருட்களும் உரவகைகளும், மரக்கறி எண்ணெய். **இயற்கை வளங்கள்:** சில பெற்றோலிய வகைகள், நீர்மின்வலு, யுரேனியம், காரீயம், வெள்ளி, தங்கம். **ஏற்றுமதிகள்** (2005): அலுமினியம், மின்சக்தி, பருத்தி, பழங்கள், மரக்கறி எண்ணெய், புடவை வகைகள். **இறக்குமதி:** மின்சக்தி, பெற்றோலிய உற்பத்திகள், உணவுப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): நெதர்லாந்து, துருக்கி, உஸ்பெகிஸ்தான், லத்வியா, சுவிற்சர்லாந்து, ரஷ்யா, கஸகஸ்தான், ஐக்கிய அமெரிக்கா, உக்ரைன், சீனா.


இஸ்மாயில் சமானி சிலை

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

* சொக்டியன் கோட்டை
* கோரொக் * பட்டுப்பாதை
* ஹாஜி யாகூப் பள்ளிவாசல்
* தஜிகிஸ்தான் தேசிய நூதனசாலை
* வஹ்தத் மாளிகை (ஒருமைப்பாட்டு மாளிகை)
* டுஷான்பே விலங்கினக்காட்சிசாலை
* குர்மின்ஜ் இசைக்கருவிகள் காட்சியம்
* காம் காஷ்மா
* இஸ்மாயில் சமானி சிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. சபை குடும்ப உறுப்பினர்கள்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் குடும்பமானது ஐக்கிய நாடுகள் செயலாளர் அலுவலகம், ஐ.நா நிகழ்ச்சித் திட்டம், நிதியங்கள் மற்றும் விசேட நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இங்கு 35 நிதியங்கள் மற்றும் விசேட நிறுவனங்கள் என்ற பெயரில் அழைக்கப்படும் மேலும் 16 நிறுவனங்களும் உள்ளன. பரந்தளவில் செயற்படும் ஐ.நாவின் அமைப்புகள் வருமாறு:

IFAD INTERNATIONAL FUND FOR AGRICULTURAL DEVELOPMENT
விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD)

சர்வதே அபிவிருத்தி அமைப்பு (IDA)

ரசாயன ஆயுதங்கள் தடைக்கான அமைப்பு (OPCW)

உலக வங்கி (WORLD BANK)

சர்வதேச நிதி நிறுவனம் (IFC)

அகில உலக தபால் சங்கம் (UPU)

சர்வதேச சொத்துரிமை அமைப்பு (WIPO)

ஐ.நாவின் கல்வி, விஞ்ஞான, கலாசார அமைப்பு (UNESCO)

சர்வதேச தொழிலாளர் அமையம் (ILO)

UNITED NATIONS INTERREGIONAL CRIME AND JUSTICE RESEARCH INSTITUTE
ஐ.நாவின் சர்வதேச வலய குற்றம் மற்றும் நீதிக்கான ஆராய்ச்சி அமைப்பு (UNICRI)

ஐ.நாவின் தொழில்நுட்ப அபிவிருத்தி அமைப்பு (UNIDO)

சர்வதேச நாணய நிதியம் (IMF)

ஐ.நா. சனத்தொகை நிதியம் (UNFPA)

உலக சுகாதார நிறுவனம் (WHO)

சர்வதேச தொலைத்தொடர்பு சேவை சங்கம் (ITU)

உலக வர்த்தக அமைப்பு (WTO)

UNCTAD
வர்த்தக மற்றும் அபிவிருத்தி பற்றிய ஐ.நாவின் கூட்டமைப்பு (UNCTAD)

UNITAR
ஐ.நாவின் பயிற்சி மற்றும் கல்வி நிறுவனம் (UNITAR)

மனித உரிமைகளுக்கான ஐ.நா.வின் உயர்ஸ்தானிகராலயம் (OHCHR)

பெண்களுக்கான ஐ.நா.வின் அபிவிருத்தி நிறுவனம் (UNIFEM)

UNHCR The UN Refugee Agency
அகதிகள் தொடர்பான ஐ.நா.வின் உயர்ஸ்தானிகராலயம் (UNHCR)

UNEP
ஐ.நா.வின் சூழல் நிகழ்ச்சித் திட்டம் (UNEP)

WMO
உலக காலநிலை விஞ்ஞான அமைப்பு (WMO)

ஐ.நா.வின் அபிவிருத்தி வேலைத்திட்டம் (UNDP)

INSTRAW
பெண்கள் அபிவிருத்திக்கான சர்வதேச ஆய்வு மற்றும் பயிற்சி நிலையம் (INSTRAW)

UNODC
போதைப்பொருள் கட்டுப்பாட்டு மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பான ஐ.நா அலுவலகம் (UNODC)

UN Volunteers
ஐ.நாவின் தொண்டர் ஊழியர்கள் (UNV)

அணு ஆயுதங்களைப் பரிசோதிப்பதனை முழுமையாகத் தடை செய்யும் ஒப்பந்த அமைப்பு பற்றிய ஆணைக்குழு (CTBTO)

சர்வதேச வர்த்தக கேந்திரம் (ITC)

ஐ.நா.வின் சமூக அபிவிருத்தி ஆய்வு நிறுவனம் (UNRISD)

UNITED NATIONS UNIVERSITY
UNU/C3 Campus Computing Centre
ஐ.நா.வின் பல்கலைக்கழகம் (UNU)

UN-HABITAT
ஐ.நா.வின் குடியிருப்பு கேந்திரம் (HABITAT)

unrwa الأونروا
மத்திய கிழக்கு பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நாவின் உதவி சேவைகள் மற்றும் வேலை நிறுவனம் (UNRWA)

WORLD FOOD DAY
ஐ.நாவின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO)

உலக உணவுத்திட்டம் (WFP)

IAEA
சர்வதேச அணுசக்தி நிறுவனம் (IAEA)

சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு (ICAO)

UNICEF
ஐ.நா.வின் சிறுவர் நிதியம் (UNICEF)

(இ)

படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:....................................
முகவரி:....................................
....................................
பாடசாலை:....................................
வகுப்பு:....................................
திகதி:....................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் I (கடந்த வாரத் தொடர்ச்சி...)

சுட்டெண்: .............................. நேரம்: 45 நிமிடங்கள்

★ தரப்பட்டுள்ள தகவலை வாசித்து, 24 முதல் 26 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

தினேஸ் என்பவரது வீட்டின் முற்றத்தில் பலாமரம் ஒன்று உள்ளது. பலா மரத்திற்கு மேற்குப் பக்கத்தில் தென்னை மரம் ஒன்றும் கிழக்குப் பக்கத்தில் மாமரமும் உள்ளது. மாமரத்திற்கு வடக்குத் திசையில் பப்பாசி மரம் உள்ளது. பப்பாசி மரத்திற்கு கிழக்குப் பக்கத்தில் கொய்யாமரம் உள்ளது எனின்;

24. கொய்யா மரத்தின் கீழே இருந்து பார்த்தால் மாமரம் தோன்றும் திசை எது?

(i) நிருதி மூலை (ii) அக்கினி மூலை (iii) வாயு மூலை


25. தென்னை மரத்திற்கு கிழக்குப் பக்கத்தில் உள்ள மரம் எது?

(i) பலா மரம் (ii) பப்பாசி மரம் (iii) கொய்யா மரம்

26. 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் திகதி போயா தினம் (பூரணை) என்பதால் பாடசாலை விடுமுறையாகும். எனின், 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் போயா தின விடுமுறையாக அமையக்கூடிய திகதி எது?

(i) 1 (ii) 14 (iii) 29

★ 27 முதல் 29 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள தகவல்களின் மூலம் சரியான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.




= 3 மாணவர்களைக் குறிக்கும்

= 4 மாணவர்களைக் குறிக்கும்

= 2 மாணவர்களைக் குறிக்கும்

27. ஆகக் கூடுதலான மாணவர் தொகையைக் குறிக்கும் உருவம் எது?

(i) (ii) (iii)




28. மொத்த மாணவர் தொகை யாது?

(i) 19 (ii) 20 (iii) 18

29. 8 மாணவர் தொகையைக் காட்டும் உருவம் எது?

(i) (ii) (iii)




★ 30 முதல் 31 வரையிலான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

30. மகரதம் என்பது ✳◈⊙△✹ எனும் குறியீட்டால் எழுதப்பட்டால், கம்பீரம் என்பதைக் குறிக்கும் சரியான குறியீடு எது?

(i) ✳⊙▣◈✹ (ii) ◈✹○⊙✹ (iii) ◈✹⊙⊙✹

31. 9 ✳ 3 = △, △ + △ = 6 — இங்கு ✳ இக்குறியீடு குறிப்பது;


(i) + (ii) × (iii) ÷

32. 


இரண்டு பக்கங்கள் திறந்த நிலையில் உள்ள சதுர வடிவான பெட்டி ஒன்றில் தரப்பட்டுள்ளவாறு இலக்கங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இப்பெட்டியைக் கீழே காட்டப்பட்டுள்ளவாறு திருப்பினால், 5 என்ற இலக்கத்திற்கு எதிர்ப்பக்கத்தில் இருக்கும் இலக்கம் எது?

(i) 3 (ii) 6 (iii) 4

33. சதுர வடிவான கடதாசி ஒன்றை முக்கோண வடிவமாக இரண்டாக மடித்து படத்தில் காட்டப்பட்டவாறு வெட்டினால் தோன்றும் உருவம் யாது?




(i) (ii) (iii)

34. 


இங்கு காணப்படும் உறவுமுறைக் கோட்டுப்படத்தில் குமாரின் மாமாவின் பெயர் என்ன?


(i) விமல் (ii) தினேஸ் (iii) ரவி




35. 

இங்கு காணப்படும் முக்கோணங்களின் எண்ணிக்கையை எழுதுக.


(..............................)

36. 


1m=5cm ஆயின்; A யில் இருந்து B வரையிலான தூரத்தை cm இல் எழுதுக.

(..............................)

★ 37 முதல் 38 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள குறியீடுகளையும் இலக்கங்களையும் பயன்படுத்தி விடைகளை எழுதுக.



37. கூடுதலாகக் காணப்படும் இலக்கம் எது?

(..............................)

38. குறைவாகக் காணப்படும் குறியீடு எது?

(..............................)

39.

| யு | கூ | ம் |
|---|---|---|


| ம | ரி | ய |
|---|---|---|

| உ | ழை | ன் |
|---|---|---|

| பெ | தி | ய் |
|---|---|---|

இங்கு தரப்பட்டுள்ள எழுத்துக்களில் இருந்து ஆறு எழுத்துக்களைக்கொண்ட இரண்டு சொற்களுடன்கூடிய எதிர்கால இயற்கை நிகழ்வை ஆக்கி எழுதுக.

(..............................)

40. 


இங்குள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை இலக்கங்களின் எண்ணிக்கைகளைவிடக் குறைவாயின், 'வ' என்ற எழுத்தின் மீது '√' இடுக. அவ்வாறு இல்லை எனின், வட்டமிடப்பட்ட 4 என்ற இலக்கத்தின் மீது 'x' இடுக.

## வினாத்தாள் I இன் விடைகள்

*(மார்ச் 17, 24 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

01. (i) 02. (iii) 03. (ii) 04. (iii) 05. (ii)

06. 

07. 

| | | | | |
|---|---|---|---|---|
| 08. (iii) | 09. (iii) | 10. (ii) | 11. (ii) | 12. (ii) |
| 13. (i) | 14. (ii) | 15. (i) | 16. (i) | 17. (ii) |
| 18. (i) | 19. (ii) | 20. (i) | 21. (iii) | 22. 8 |
| 23. 48 | 24. (i) | 25. (i) | 26. (ii) | 27. (ii) |
| 28. (i) | 29. (iii) | 30. (ii) | 31. (iii) | 32. (iii) |
| 33. (iii) | 34. (iii) | 35. 20 | 36. 110cm | 37. 4 |

38. ✹ 39. மழை பெய்யும் 40. 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை போஷிக்கும் நதிகள்



நைல் நதி

**புவியின் மேற்பரப்பில் 2/3 பகுதி நீரால் நிரம்பியுள்ளது. மனிதன், தாவரங்கள் மற்றும் ஏனைய உயிரினங்கள் அனைத்தும் உயிர் வாழ்வதற்கு நீரானது செலுத்தும் பங்களிப்பு அளப்பரியது. நீர்நிலைகளில் சமுத்திரத்தை அடுத்து பிரதான இடத்தை வகிப்பது நதிகள் ஆகும். உலகைப் போஷிக்கும் வளங்களில் நதிகளுக்கும் முக்கிய பங்குண்டு. அந்தவகையில், உலகின் முக்கியமான நதிகள் சிலவற்றைப் பற்றி அறிந்துகொள்வோம்**

## நைல் நதி

ஆபிரிக்கா கண்டத்தை ஊடறுத்துச் செல்லும் நைல் நதியானது, 'எகிப்தின் கொடை' என வர்ணிக்கப்படுகின்றது. நைல் நதியே உலகின் மிக நீளமான நதியாகும். புருண்டி நாட்டில் 'ககேரா' எனும் பெயரிலான நதியாகவே நைல் நதி ஆரம்பமாகின்றது. ஒவ்வொரு பிரதேசங்களிலும் அதன் ஆரம்பநிலையில் அது பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. வெள்ளை நைல் நதி, நீல நதி, மலை நதி, கிராப் நதி என்பன அவற்றில் சிலவாகும்.

6,650 கி.மீற்றர் நீளமான இந்த நதி மத்திய தரைக் கடலில் சங்கமமாகின்றது. எகிப்து நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 96% மான பகுதி மனித வாழ்க்கைக்கு பொருத்தமற்ற பாலைநிலமாகும். மிகுதி 4% மான பகுதியே மனித வாழ்க்கைக்கு உகந்த வளமான பிரதேசமாகும். இதுதான் நைல் நதியை அண்டிய பிரதேசமாகும். 'வெள்ளை நைல்' என அழைக்கப்படும் வைட் நைல்தான் நைல் நதியின் மிகப்பெரிய கிளை நதியாகும்.

நைல் நதிக்கு குறுக்காகக் கட்டப்பட்டுள்ள அஸ்வான் அணைக்கட்டுத்தான் உலகின் மிகப்பெரிய அணைக்கட்டாகும். எகிப்தின் புகழ் பெற்ற ஆட்சியாளரான அப்துல் கமல் நாஸர் என்பவர்தான் இந்தப் பாரிய அணைக்கட்டினை நிர்மாணிப்பதற்கு மூலகர்த்தாவாகத் திகழ்ந்தார். அவர் நைல் நதியை மறித்து அஸ்வான் பிரதேசத்தில் இந்த அணைக்கட்டை நிர்மாணித்தார். அஸ்வான் அணைக்கட்டானது மனிதனால் உருவாக்கப்பட்ட உலகிலேயே மிகப்பெரிய அணைக்கட்டாகத் திகழ்கின்றது.

## அமேசன் நதி

அடர்ந்த அமேசன் காட்டின் மத்தியில் பாய்ந்தோடும் மற்றொரு மாபெரும் நதியே அமேசன் நதியாகும்.

அந்தீஸ் மலைத்தொடரின் ஹவில்கனோடா எனும் உயர் மலையில் லொரிகோவா எனும் இடத்திலுள்ள 'லொரி' எனும் ஏரிதான் அமேசன் நதியின் பிறப்பிடமாகும். உரும்பாய் எனும் இடத்தில் இருந்துதான் இந்த நதிக்கான சரியான வடிவம் கிடைக்கின்றது. அங்கிருந்து மேலும் பல கிளை நதிகளை உள்வாங்கிக் கொண்டு பெருக்கெடுத்தோடும் அமேசன் நதியானது, பல நாடுகளை ஊடறுத்துச் சென்று இறுதியில் சமுத்திரத்தில் கலக்கின்றது. பிரேசில், பேரு, பொலிவியா, கொலம்பியா, ஈக்வடோர், வெனிசுவெலா, கயானா ஆகிய நாடுகள் அமேசன் நதியினால் போஷிக்கப்படுகின்ற நாடுகளாகும். பிரேசில் நாட்டின் பிரதான நதியாக அமேசன் நதியே திகழ்கின்றது.



அமேசன் நதி

இந்த நதி 6,400 கிலோமீற்றர் நீளமானதாகும். அமேசன் நதியின் காரணமாக 'ப்ரீவாஸ்' எனும் சமுத்திர கழிமுகமும் உருவாகியுள்ளது. அந்த சமுத்திர கழிமுகத்தினூடாக கடலில் கலக்கும் நீரானது கடல் நீரை வெகுதூரத்துக்குத் தள்ளியவாறே சமுத்திரத்தில் கலக்கின்றது. அமேசன் வனாந்தரத்தில் ஆண்டு முழுவதும் குறைவில்லாத அதிக மழைவீழ்ச்சி கிடைக்கின்ற அதன் பெறுபேறாக அமேசன் நதி பெருக்கெடுத்து ஓடுவதால் வெள்ளப்பெருக்கும் ஏற்படுகின்றது.

அண்மைய கணிப்பீடொன்றின்படி புவியின் மேற்பரப்பில் காணப்படும் நீரில் 1/5 பங்கு நீர் அமேசன் நதி நீராகும். ஒரெல்லானா கங்கை, மராஞாங், பரத்து தொஸ், துபிஸ் ரியோத லாஸ், எமசோனாஸ், எமசோனாவின் மகாநதி என்பன அமேசன் எனும் மாபெரும் நதி உருவாகக் காரணமாக அமைந்துள்ள கிளை நதிகளாகும். தென் அமெரிக்கா கண்டத்தின் மிகப்பெரிய நதியாகிய அமேசன் உலகின் நீளமான நதிகளில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது.

## யாங்ஸி நதி


சீனாவின் மிக முக்கியமான நதி யாங்ஸி நதியாகும். இந்த நதி மேற்கு சீனாவின் ஹங்குலா மலையில் கெடங்டொங் எனும் இடத்திலிருந்து ஆரம்பமாகி, கிழக்கு சீனாவின் கடலை நோக்கிப் பாய்கின்றது. ஆரம்பம் முதல் முடிவு வரை பல்வேறு இடங்களில் பல்வேறு பெயர்களால் இந்நதி அழைக்கப்படு கின்றது.

நதியின் ஆரம்பத்தில் 'வொவுடு நதி' எனவும் அதன்பின்னர் 'டொர்டியன்' எனும் பெயரிலும் அழைக்கப்படுகின்றது. அதனை தொடர்ந்து வரும் ஒரு பிரதேசத்தில் 'ஜின்ஷா' எனப் பெயர் பெறுகிறது.

அதன்பின்,பனியால் மூடப்பட்ட 'பாய்மா' மலையின் கிழக்குப் பக்கமாக இரு மலைகளுக்கு இடையில் பாய்ந்தோடுகின்றது. அப்பிரதேச மக்களோ அதனை 'ஆவிப்பிளவு' அல்லது 'உயிர்ப் பிளவு' என அழைக்கின்றனர். ஒடுங்கிய பிரதேசத்தில் இந்நதி வேகமாகப் பாயும்போது எழும் பேரோசையே இப்பெயர் வரக் காரணமாக அமைந்துள்ளது. இந்நதியின் சில பகுதிகள் கப்பல் போக்குவரத்திற்கும் உகந்ததாக இருக்கின்றது. சிச்சுவான் பிரதேசமே கப்பல் போக்குவத்திற்கு உகந்த பகுதியாகும். அப்பிரதேசத்தில் இந்நதியூடான போக்குவரத்திற்காக படகுகள் பயன்படுத்தப் படுவதையும் காணலாம். சீனாவின் நிலப்பரப்பின் பெரும் பகுதியை 'யாங்ஸி' நதியின் நீரே வளமாக்குகின்றது. இந்நதி 5,520 கி.மீற்றர் நீளமுடையது.

## உலகின் புகழ்பெற்ற மேலும் சில ஆறுகள்

- மிசூரி மிசிசிப்பி
- ஹுவாங்-ஹோ (மஞ்சள் ஆறு)
- கொங்கோ
- அமு டார்யா
- கொலராடோ
- யூப்ரடீஸ்-டைக்றீஸ்
- கங்கை
- சிந்து நதி
- தேம்ஸ் நதி
- வோல்டா நதி



யாங்ஸி நதி

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் மாசடையும் வழிமுறைகள் சில....





வளர்ந்து வரும் இந்த விஞ்ஞான உலகில் துரிதமாக சூழல் மாசடைந்து வருவது உலக சமுதாயத்திற்கு பெரும் அச்சுறுத்தலாகவும் சவாலாகவும் அமைந்துள்ளது. நமது சுற்றுச்சூழலின் இயல்புநிலை சீர்குலைவதே 'மாசுபடுத்தல்' (Pollution) என்பதன் அர்த்தமாகும். இந்த சீர்குலைவு இருவிதங்களில் நிகழ்கின்றன. ஒன்று; இயற்கை செயற்பாடுகளால் ஏற்படுவது. மற்றையது; மனிதனின் செயற்பாடுகள் மூலம் நிகழ்வது. இவை எதிர்கால உலகில் மிக அபாயகரமான விளைவுளை ஏற்படுத்தும் என அச்சுறுத்தப்படுகின்றது. எனவே, இவ்விதழில் சூழல் மாசடையும் வழிமுறைகள் குறித்து ஆராய்வோம்

## வளி மாசடைதல்

தாவரங்கள், உயிரினங்கள் போன்வற்றின் உயிர் வாழ்விற்கு இடையூறு ஏற்படும் விதத்தில் காற்றின் இயல்பான சேர்க்கையில் மாற்றங்கள் ஏற்படுவதே 'வளி மாசடைதல்' ஆகும். தொழிற்சாலைகள், வாகனங்கள், அனல் மின்நிலையங்கள் போன்றவற்றின் புகைக்குழாய் வழியாக வெளியேறும் ஆபத்தான ரசாயன வாயுக்களே இதற்கு பெரிதும் காரணமாக அமைகின்றன.

வளி மாசடைவதனால் உயிரினங்கள் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்க

நோய்களும் அவற்றில் பிரதானமானவை. வளி மாசடைதல் மூலம் வளிமண்டலத்தில் காபன் டயொக்சைட்டின் அளவு கூடுகிறது. பச்சைவீட்டு விளைவு வாயுக்களின் மூலம் புவியின் வெப்பநிலையும் அதிகரிக்கின்றது. இவ்விதமாக வெப்பநிலை அதிகரிப்பதால் துருவப் பகுதிகளில் இருக்கும் பனிப்பாறைகள் உருகி, கடல் நீர்மட்டம் உயர்கின்றது. இந்நிலையினால், கரையோர நிலப்பகுதிகள் கடலில் மூழ்கும் நிலை ஏற்படுகின்றது.

### மாசுக்களால் ஏற்படும் சுகாதாரப் பா




## நீர் மாசடைதல்

நீருடன் மனிதனுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் உள்ள தொடர்பு அவற்றின் பிறப்பில் இருந்தே ஆரம்பமாகின்றது. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகள் நேரடியாகவே நீர்நிலைகளில் செலுத்தப்படுவதோடு, வெளியிடப்படும் அமிலத்தன்மை மிகுந்த வாயுக்கள் வளிமண்டலத்தில் கலந்து அமில மழையாகப் பொழிந்து நீரை மாசுபடுத்துகின்றன. நைதரசன், கந்தகம் போன்றவற்றின் ஒக்சைட்டுக்களே அமில மழை[illegible] அடிப்படையாகும்.

விவசாயப் பகுதிகளில் இருந்து வெளியேறும் கழிவுகள் ஏரிகளிலும் குளங்களிலும் ஆறுகளிலும் நேரடியாகக் கலக்கின்றன. தவிர, வீட்டுப் பயன்பாட்டில் இருந்து வெளியேறும் மாசுகளும் சாக்கடை வழியாகச் செல்லும் கழிவுகளும் இறுதியில் நீர்நிலைகளையே சென்றடைகின்றன. இவ்வாறு ஒரே நேரத்தில் பல பகுதிகளில் இருந்து பல்வேறு வடிவங்களில் நீர்நிலைகளை வந்தடையும் கழிவுகளால் நீரின் ரசாயன, பௌதீக, உயிரியல் பண்புகள் முற்றாகவே மாற்றிவிடுகின்றன.

யுத்தம் மற்றும் எண்ணெய் அகழ்வு போன்றவற்றின் விளைவாக கடலின் மேற்பரப்பில் ஒரு படலம் போன்று பரவி நிற்கும் எண்ணெய்யும் மிக ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும். முக்கியமாக கடல்வாழ் உயிரினங்களின் அழிவிற்கு இது வழிவகுக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உங்களுக்குத் தெரியுமா?

உலகெங்கிலும் சுமார் 100 கோடி மக்களுக்கு மேல் தூய்மையான குடிநீர் கிடைப்பதே இல்லை. இதன் விளைவாக அசுத்த நீரைப் பருகவேண்டிய நிலைமைக்கு உட்படுவதால், வருடந்தோறும் சுமார் 33 லட்சம் மக்கள் மரணமடைகின்றனர் என்று கணிப்பீடொன்று தெரிவிக்கின்றது.

## மண் மாசடைதல்

தொழிற்சாலைகள், விவசாயத்திற்கான ரசாயன உரப் பயன்பாடு, துரித நகரமயமாக்கம், ப்ளாஸ்டிக் பொருட்கள் மண்ணில் கலத்தல், காடழிப்பு, மண்ணரிப்பு என்பனவற்றின் மூலம் மண்ணின் இயல்புத் தன்மை பெருமளவில் பாதிப்படைகின்றது.




உயிர்ச்சத்து மிகுந்த வளமான மண் மக்களின் செழிப்பை உறுதிப்படுத்துகின்றது. அது லட்சக்கணக்கான நுண்ணுயிரிகளின் வாழ்விடமாகும். பக்றீரியா போன்ற நுண்ணுயிரிகள் பொருட்களை அழுகச் செய்து, அவற்றை மண்ணோடு மண்ணாக மக்கிப் போகச் செய்கின்றன.இதனால், மண்ணின் வளம் மேலும் அதிகரிக்கின்றது. மண்ணின் வளத்தை செயற்கையாக மேம்படுத்தும் நோக்கிலும் பயிர்களைக் காக்கவும் இடப்படுகின்ற ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றாலும் மண் வளம் பாதிப்படைகின்றது.

## ஹைடெக் மாசுக்கள்

இன்றைய விஞ்ஞான உலகில் நவீன தொழில்நுட்பத்தின் விளைவாக உருவாக்கப்படுகின்ற அபாயகரமான கழிவுகளே ஹை டெக் மாசுக்கள்(Hi-tech trash) இவை சாதாரண கழிவுகளை விடவும் அதிகளவில் குவிந்து வருகின்றன. சுற்றுச்சூழலையும் தாவரங்கள் மற்றும் உயிரினங்களையும் பெரிதும் பாதிக்கின்றன.'வேதியல்' பண்புகளைக் கொண்டு இத்தகைய கழிவுகளை அழிப்பதும் மீள் ஆக்கம் செய்வதும் மிகவும் சிக்கலான விடயமாகும். அணுக்கழிவுகள், உயிரி-மருத்துவக் கழிவுகள் (Bio-Medical Waste), ப்ளாஸ்டிக் கழிவுகள், மின்கழிவுகள் (e-Waste) இத்தகைய கழிவுகளுக்குள் உட்படுகின்றன.

## அணுக்கழிவுகள்

உலகின் பல நாடுகள் இன்றளவில் பாரியளவு மின்சாரப் பற்றாக்குறையை சந்தித்து வருகின்றன. இத்தகைய சந்தர்ப்பத்தில் அணு மின்நிலையங்கள் பலவற்றின் தேவை அதிகரித்து வருகின்றது. அணு மின் உற்பத்தியின் போது வெளியேற்றப்படும் கழிவுகளில் 'ரேடியோ எக்டிவ்' பொருட்கள் அடங்கியிருக்கின்றன. இக்கழிவுகளை நேர்த்தியாக அகற்றுவதற்கான தொழில்நுட்பம் இதுவரையிலும் வெற்றிகரமாகக் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஒரு தொன் யுரேனியத்தில் 1000 தொன் நிலக்கரியில் இருந்து கிடைப்பதைவிடவும் அதிகளவிலான சக்தி கிடைக்கின்றது. ஆனால்,1000 தொன் நிலக்கரியால் விளையும் ஆபத்தை விட பன்மடங்கு ஆபத்து, ஒரு நிமிட அணுத்தவறால் விளைகின்றது. இதில் இருந்து அணு மின்உற்பத்தியின் போதான ஆபத்து நிலையை உணரலாம்.

## Bio-Medical கழிவுகள்

வைத்தியசாலைகள்,சிறிய மருத்துவமனைகள் மற்றும் பரிசோதனை நிலையங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் மூலம் ஏற்படுத்தப்படுகின்ற சுகாதாரக் கேடுகள் அளவற்றவை. அறுவை சிகிச்சைகளுக்குப் பயன்படுத்தும் கத்தி, மருந்துக்குப்பிகள், ஊசிகள், புண்களைக் கட்டிய பென்டேஜ் துணிகள், அறுவை சிகிச்சையின் பொழுது வெட்டி எடுக்கப்படுகின்ற உடல் உறுப்புக்கள், பரிசோதனைக்காக எடுக்கப்படும் இரத்த மாதிரிகள் போன்றவை இத்தகைய கழிவுகளில் அடங்குகின்றன.

1993 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி, நமது அண்டைய நாடான இந்தியாவில் மட்டும் வருடம் ஒன்றுக்கு சுமார் 54000 தொன் பயோ மெடிகல் கழிவுகள் வெளியேற்றப்படுகின்றன. இந்தியாவில் மருத்துவத்துறை மேலும் விரைவாக முன்னேறி வரும் இவ்வேளையில், தற்பொழுது (17 வருடங்களின் பின்னர்) கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டால், இத்தொகை எத்தனை மடங்காக அதிகரித்திருக்கும் என்பதை ஊகிக்கும் பொழுது, கொட்டப்படும் கழிவுகளின் அளவு மலைக்க வைக்கும் என்பதோடு, அதனால் ஏற்படுத்தப்படும் மாசடைதலையும் அறிந்துகொள்ளமுடியும்.




## அமில மழை

இன்று வளி மாசுபடுவதற்கு முக்கிய காரணங்களாக சல்ஃபர் டயொக்சைட், நைதரசன் ஒக்சைட் போன்ற அமிலத் தன்மையுள்ள வாயுக்கள் அமைகின்றன. இந்த வாயுக்கள் மழைத்துளியில் கலக்கும்போதே அமில மழை பெய்கின்றது. தொழில்நுட்ப வளர்ச்சி அடைந்த நாடுகளில் பெரும் அச்சுறுத்தலாக மாறிவிட்ட இந்த அமில மழை, சர்வதேச சட்டப்படி ஒரு சுற்றுச்சூழல் பிரச்சினையாகவும் அமைகின்றது. ஒரு நாட்டின் விஷவாயுக்கள் பறந்து மற்றொரு நாட்டில் அமில மழையாகப் பெய்வதால், இதுவொரு சர்வதேச சட்டப்பிரச்சினையாக மாறியுள்ளது. உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் இந்தியாவில் உள்ள 'தாஜ்மஹால்' கட்டடத்தின் சுவர்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு முக்கிய காரணமாக இந்த அமில மழை காணப்படுவதாகவும் தற்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## தொழிற்சாலைகளூடாக வெளியேற்றப்படுகின்ற மாசுக்கள்

| தொழில்சார் தொழிற்சாலைகள் | வெளியாகும் மாசுக்கள் |
|---|---|
| 01. அலுமினியம் அனோடை சிங் | க்ரோமியம் |
| 02. தோல் ஆலைகள் | டார்டரிக் அமிலம் |
| 03. ப்ளீச்சிங் தொழில் | சல்ஃபேட் க்ளோரைட் |
| 04. அணுசக்தி நிலையங்கள் | ஃப்ளோரைட்கள் |
| 05. செரமிக் தொழில் | ஃப்ளோரைட்கள் |
| 06. ரசாயனப் பொருள் உற்பத்தி | அமோனியா, நைதரசன் கலவை, கார்பனிக் அமிலங்கள் |
| 07. உரத் தயாரிப்பு | பொஸ்பேட், ஃப்ளோரைட்கள் |
| 08. காபன்சார் தொழில் | துத்தநாகம் |
| 09. பென்சில் உற்பத்தி | காரீயம் |
| 10. பெட்ரோ கெமிக்கல் | ஹைட்ரோகாபன் |
| 11. செயற்கை றப்பர் | ஹைட்ரோகாபன் |
| 12. டிரான்சிஸ்டர் உற்பத்தி | காரீயம் |
| 13. பெற்றோலிய சுத்திகரிப்பு | ஹைட்ரோகாபன், கிரீஸ், கொழுப்பு |
| 14. உலோக சுத்திகரிப்பு | ஃப்ளோரைட்கள் |

## இ-கழிவுகள்

பயன்பாட்டுக்காலம் முடிந்து, தூக்கி எறியப்பட்ட மின்சார மற்றும் இலத்திரனியல் பொருட்களின் பாகங்களையே இ-கழிவுகள் என்கின்றனர். தொலைக்காட்சி, வானொலி, கணினி, ஒலிப்பதிவு கருவி, விசிடி, கையடக்கத் தொலைபேசி முதல் ஹைடெக் விளையாட்டுப் பொருட்கள் வரை இக்கழிவுகளில் இடம்பெறுகின்றன. இவற்றில் கணினி மொனிட்டர் மற்றும் தொலைக்காட்சி மொனிட்டரில் இரண்டு கிலோ அளவிற்கு ஈயம் அடங்கியுள்ளது. இதுதவிர, கெட்மியம், க்ரோமியம், டின், இரசம், நிக்கல் போன்ற நூற்றுக்கும் அதிகமான அபாயகரமான பொருட்கள் இதில் அடங்கியுள்ளன.



## சூழலை காப்பதற்கான செயற்பாடுகள்

சூழல் பேணற் செயற்பாடுகள் எனப்படுபவை, சூழல் மாசடைதலில் இருந்து சூழலைக் காப்பதற்கான செயற்பாடுகள் ஆகும்.

**சூழல் பேணற் செயற்பாடுகள் ஆவன:**

- கழிவு கட்டுப்படுத்தல் - Reduce
- மீள் உபயோகம் -Reuse
- திருத்திப் பயன்படுத்தல் - Repair
- மீள் உருவாக்கம் -Recycle
- கழிவு அகற்றல் -Remove

**இரஞ்சித் ஜெயகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பிரச்சினை ஏற்படுத்தும் தீமை

ஒக்டோபர் 16 ஆம் திகதி உலக உணவு தினமாகும். இத்தினமானது ஒவ்வொரு வருடமும் பிரதானமாக அனுஷ்டிக்கப்படுவதன் நோக்கம் உணவின் முக்கியத்துவத்தை விளக்குவதற்காகும். அத்துடன், உணவு தொடர்பான பிரச்சினைகளுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குமாகும்.

எனவே, நாம் உணவுப் பிரச்சினை தொடர்பாக ஒரு விழிப்புணர்வை பெறுவது அவசியமாகும். மனிதன் தனது நாளாந்தப் பணிகளை செய்வதற்குத் தேவையான சத்தியினைக் கொடுக்கும் உணவைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதே உணவுப் பிரச்சினை எனப்படுகின்றது.

இவ்வாறான நிலைமை பொதுவாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிடையே காணப்படுகின்றது. குறிப்பாக, வடகொரியா, சோமாலியா, எத்தியோப்பியா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் முதலிய நாடுகள் இன்று மோசமான உணவுப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றன.

இவ்வாறு உணவுப் பிரச்சினைகள் ஏற்பட பல்வேறு காரணங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. சனத்தொகை அதிகரிப்பு, இயற்கை அழிவுகள், வறுமை, நிலம் துண்டாடப்படுதல், சூழல் பாதிப்பு போன்ற காரணங்களால் உணவு உற்பத்தி குறைவடைந்து உணவுப் பிரச்சினை ஏற்படுகின்றது. சில நாடுகள் தாம் உற்பத்தி செய்த பொருட்களில் ஒரு பகுதியை விரயமாக்கவும் செய்கின்றன.

இதுபோன்ற காரணங்களால் உணவுப் பிரச்சினை ஏற்படுகின்றது. உணவுப் பிரச்சினையால் பல்வேறு நோய்கள் ஏற்படல், உடல் வளர்ச்சி குன்றல், அபிவிருத்தி தடைப்படல் போசாக்குக் குறைபாடுகள் மரண வீதம் அதிகரித்தல் போன்ற தீமைகள் ஏற்படுகின்றன.

உணவுப் பிரச்சினையை தீர்ப்பதற்கு பல்வேறு செயற்றிட்டங்களை நாம்





நமது வீட்டுச் சூழலிலேயே செயற்படுத்த முடியும். வீட்டுச்சுழலில் உணவுப் ப்யிர்களை வளர்த்தல், அயலவர்களை பயிர் செய்கைக்கு ஊக்குவித்தல், பயிர்களின் விதைகளை உற்பத்தி செய்து விற்றல், கன்றுகளை உற்பத்தி செய்து விற்றல், விரயங்களைத் தடுப்பதற்கான அறிவூட்டல் போன்ற பல நடவடிக்கைகள் மூலமும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் உணவுப் பிரச்சினையைத் தீர்க்கலாம். விவசாயிகளுக்கு கடன் வழங்கல், நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், இலவசக் காப்புறுதி வழங்கல், ஓய்வூதியத் திட்டம், மானிய அடிப்படையில் விதை, இயந்திரம் வழங்கல் போன்ற பாரிய செயற்றிட்டங்களை அறிமுகப்படுத்துவதனூடாகவும் உணவு உற்பத்தியைப் பெருக்கி உணவுப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்.

**சு.ஜீவன் பிரதாப்,**
**பேராதனை இ.கல்.,கண்டி.**






## மகாவலி கங்கை

மங்கள மகாவலி கங்கையே
மலையில் உருவாகி அருவியாய்
நீ எழுகின்றாய் .....
பயிர்கள் வளர நீர் தருகின்றாய்
எங்கும் தொழில்வளம் கண்டிடுவோம்
நன்கே உழுதொழில் செய்திடுவோம்
மங்கா ஒளிதரும் மின்சக்தியால்
தொங்கும் மின்விளக்கும் ஏற்றிடுவோம்
பாயும் மகாவலி நீர் அதனால்
நாட்டில் பஞ்சம், பசி,பிணி பறந்திடுமே.

எஸ். சசிக்கா, தரம் 6,
பிட்டகந்தை த.வித்., மாத்தளை.

# முயற்சியே வெற்றிக்கு வழி



'முயற்சி திருவினையாக்கும்', 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்பன முயற்சியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் பழமொழிகள். ஆகாயத்தில் கோட்டை கட்டுதல் கூட தற்போது முயற்சியினால் திருவினையாக்கப்பட்ட ஓர் உண்மை. முயற்சி செய்யாமல் ஏனோதானோவென இருந்துவிட்டு பின் தோல்வியைக் கண்டு வருந்தக்கூடாது. ஊக்கத்துடன் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். எவற்றிற்காக முயற்சி செய்வது? எமது இலக்குகள் அனைத்திற்காகவும் முயற்சி செய்யலாம். சாத்தியம் இல்லை எனக் கைவிடப்பட்ட விடயங்களுக்காகவும்



முயற்சிக்கலாம். முயற்சிகள் தோல்விகளில் முடிந்தால் மனம் தளராத மனம் வேண்டும். எடிசன் ஆயிரம் முறை முயற்சித்து ஆயிரத்து ஓராவது முறையில் மின்குமிழை ஒளிரச் செய்தாராம். சிறுகுழந்தை நடக்கும் முயற்சியில் எத்தனை தடவை தடுக்கி விழுகிறது. நான் நடக்கமாட்டேன் என நினைத்தால் இவ்வுலகில் ஒருவரும் நடக்கப் பழகியிருக்க மாட்டோம். தன்னம்பிக்கை,ஊக்கம்,முயற்சி என்பன இருந்தால் வாழ்வில் வெற்றியடையலாம். புகழ் பெற்றவர்கள் அனைவருமே ஏதோ ஒருவகையில் தமது லட்சியத்தை அடைய உழைத்திருக்கிறார்கள்.

விடாமுயற்சிக்கு என்றும் கிடைப்பது வெற்றி என்ற பரிசுதான். நல்வழிகளில் நல்லவற்றை அடைய முயற்சித்து நன்மையடைவோம்.

**ந.மலரினி, தரம்-10,**
**ஓமந்தை, வவுனியா.**

# ராமுவின் அதிர்ஷ்டம்



ராமு மிகுந்த சோம்பல் உடைவன். எப்போது பார்த்தாலும் வேலைவெட்டி இல்லாமல் சும்மாவே இருப்பான். பாவம், அவனது மனைவி! கூலி வேலை செய்து பொறுப்பற்ற அவனையும் குடும்பத்தையும் கவனிக்க வேண்டியதாயிற்று.

ஒருநாள் மனைவியின் பொறுமை எல்லை மீறியது.

''இந்தாங்கோ .. இனிமேல் சம்பாதிச்சி ஏதாச்சும் கொண்டு வந்தாத்தான் சாப்பாடு'' என்று உறுதியாகக் கூறிவிட்டாள்.

சாப்பாடு தடைப்பட்டபோதுதான் ராமுவுக்குப் பசியின் கொடுமை விளங்கியது. கோபத்துடன் வீட்டை விட்டு வெளியேறினான். பாதையில் சென்று கொண்டிருந்தபோது, ஒருவன் கன்னத்தில் கையை வைத்தபடி கவலையுடன் உட்கார்ந்திருந்ததைக் கண்டதும் அவனுக்கு மேலும் கோபம் வந்துவிட்டது. ''முதன்முதலா வீட்டை விட்டு வெளியேறினால் இது என்ன அபசகுனம்'' என்று நினைத்தவன், கோபத்துடன் அவனது அருகில் போய் 'பளார்' என்று கன்னத்தில் ஓங்கி அறைந்தான். மறுகணம் அந்த மனிதன் ராமுவின் இரு கைகளையும் பற்றிக்கொண்டான்.

''ஐயா.... ரொம்ப நாளாக எனக்குக் கடும் பல்வலி.. ஆயிரக்கணக்கில் செலவழித்தும் சுகமாகவில்லை. வலியுள்ள பல்லைக் கழற்றப் பயந்துகொண்டு இருந்தேன். உங்கள் ராசியான கைபட்டதும் அந்தப் பல் கழன்றுவிட்டது. வலி பறந்துவிட்டது. உங்கள் பேருதவிக்கு இதோ! ஆயிரம் ரூபா வைத்துக் கொள்ளுங்கள்'' என்று நீட்டினான்.

ராமுவால் [illegible] யத்தை அடக்கமுடியவில்லை. 'ஒரு அடிக்கு ஆயிரம் ரூபா பரிசா என்று சிந்தித்தபடியே சென்றான்.

எதிரே ஒரு பாலத்தின் அருகில் ஒருவன் இடுப்பை இரு கைகளாலும் பிடித்தபடி ''ம்...ம்... '' என்று முனகிக்கொண்டிருந்தான்.

''நல்ல காரியமாகப் போகின்றேன். இது என்ன முனகல்''

ராமுவுக்கு மீண்டும் கோபம் பொத்திக்கொண்டு வந்தது. அவனது இடுப்பில் வலது காலால் எட்டி ஓர் உதைவிட்டான். எகிறிப்போய் கீழே விழுந்த அந்த மனிதன் சமாளித்தபடி எழுந்தான்.

''ஐயா... உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை. உங்களுடைய உதையினால் இதுவரையில் நீங்காமல் இருந்த இடுப்பு வாதம் தொலைந்து போய்விட்டது.

உதையினால் நோய் தீர்க்கும் நீங்கள் உண்மையில் ஓர் வைத்திய திலகம்தான். இதோ! உங்கள் சேவைக்கு எனது சிறு காணிக்கை இரண்டாயிரம் ரூபா பிடியுங்கள்'' என்று நீட்டினான்.

ராமுவுக்கு வியப்பு எல்லை மீறியது. 'ஒரு அடிக்கு ஆயிரம், ஒரு உதைக்கு இரண்டாயிரமா?' என்று யோசித்தபடியே சென்றான்.

எதிரே ஒரு திருமண வீடு அல்லோல கல்லோலப்பட்டது. பசி வேறு வயிற்றைக் கிள்ளியதால் சாப்பிட அங்கே போனான். முதலில் சமையற்கட்டுப்பக்கம் சென்று என்ன கறி பரிமாறப்படுகிறது என ஆராய்ந்தான். ஒவ்வொரு சட்டியாகத் திறந்து பார்த்தான். பருப்புக்கறி சட்டியைப் பார்த்ததும் அவனுக்கு எரிச்சல் வந்தது. அது அவனுக்குப் பிடிக்காத கறி. ஒரேயடியாக சட்டியைப் புரட்டிவிட்டான். அங்கே நின்ற மக்கள் அவனை அடிக்க வந்தார்கள். ஒருவர் விரைந்து வந்து அவர்களைத் தடுத்தார்.

''அவரை அடிக்காதீர்கள் அதோ! பாருங்கள் கறியில் விஷப்பாம்பு ஒன்று விழுந்து செத்துக்கிடக்கிறது. உயிர்காத்த உத்தமர். இவர் எல்லாம் அறிந்த ஞானி இவர் செய்த உதவிக்கு இதோ மூவாயிரம் ரூபா நான் கொடுக்கிறேன்''என்று மூவாயிரம் ரூபாவை அவனிடம் கொடுத்தார். ராமுவுக்கு மலைப்பு மலையளவு சென்றுவிட்டது.

''அடிக்கு ஆயிரம், உதைக்கு இரண்டாயிரம், புரட்டினால் மூவாயிரம்.. என்று என்னுடைய அதிர்ஷ்டத்தையே காட்டுகிறது. அப்படிப்பட்ட நான் சோம்பேறித்தனத்தை விட்டு உழைத்தால் லட்சம் லட்சமாகக் கிடைக்குமே''என்று சிந்தித்தான். ''இனி உழைப்பதே என் லட்சியம்'' உறுதியாகத் தீர்மானித்தபடியே வீட்டை நோக்கிச் சென்றான் ராமு.

**[illegible].எச்.முஹம்மட், தரம்-8, அறபா தே.பாட., வெலிகம.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விஜய் வாழ்த்துப் பூங்கா

நீ சுமந்து வரும் அறிவுசார் விடயங்களைப் படித்து-சுவைத்து, நான் பல பயன்களைப் பெற்றுள்ளேன்.

வி.விதுஷா,
தொட்டிலடி,
யாழ்ப்பாணம்.

தமிழ் பேசும் மாணவர்களின் எழுச்சிக்குக் காரணம் நீயே! - உனக்கு என் இனிய வாழ்த்துக்கள்.

ச.டயானந்தா,
தரம்-9^E, யாழ்ப்பாணம்.

அறிவிலி எனும் அவப் பெயரை உடைத்தெறிய உதயமான ஆசானே! பார் போற்றும் பண்பாளனாகவும் பல்கலையும் கற்றிடவும் எனை ஊக்குவித்தாய்!

டீ.எம்.றிஸ்வான்,
ஸலாமியா
அரபுக் கல்.,
ஹெம்மாதகம.

அன்பு விஜய்யே! நீ பிறக்கும் முன்னே எம் சகோதர மொழியிலான 'விஜய'வை பார்த்தும், சேகரித்தும் வந்த நான், நீ பிறந்தது முதல் இன்றுவரை உன்னைப் பொக்கிஷமாக பாதுகாத்து வருகிறேன்.

நுஸ்கி மொஹமட், தரம் - 12,
அல்-ஃபுர்கான் மு.ம.வித்.,
கலேவளை.

பாடசாலை மாணவர் முதல் அனைவரது கரங்களிலும் வாராந்தம் தவழ்ந்து கொண்டிருக்கும் 'விஜய்யே' நீ வாழ்க!

சியாஜ், சியானா,
ஸாஜித், ஸகீர், ஸிபாக்,
வாழைத்தோட்டம்,
கற்பிட்டி.

விந்தைத் தகவல் என்றதுமே
'விஜய்'யின் ஞாபகம் பளிச்சிடுமே!
விறுவிறுப்பாய் செய்திதனை சுமந்தே
விடாமல் புதனில் வெளிவருவாய்!

எஃப்.ஷிஃப்னா, தரம் - 8,
தாருல் உலூம் மு.ம.வித்.,
இறம்புக்கனை.

உன் விலை வெறுமனே பதினைந்தாக இருந்தாலும், நீ தரும் பயனோ பதினைந்து கோடி தாண்டும். மறுப்பில்லா மனத்தோடு வாரந்தோறும் மாசில்லா அறிவைத் தருகின்றாய். இத்தனை தரம்மிக்க உன் பயனை வெறும் ஆறு வரிகளில் கூறிவிட முடியாது.

அட்டுலுகம, அல்-கஸ்ஸாலி மு.ம. கல்லூரியில் தரம்-9^E யில் கல்வி கற்கும் மாணவிகளான ராஷிதா பர்வின், எஃப்.இஹ்ஸானா, எஃப்.நப்லா, எஃப்.நுஸ்கா, எஃப்.சுமையா, எம்.மதீனா.

'விஜய்', நீ மாணவர்களுக்கு சிறந்த கல்விக்கூடமாக இருக்கின்றாய்.

எஃப்.நிஸ்வானா,
இறக்குவானை.

என்னைப் போன்றோர் அறிவில் மேலும் மேலும் வளர்ச்சி பெற, உன் சேவை சிகரமென உயர வாழ்த்துக்கள்.

ஜே.இமானுவேல்,
தரம் - 8^A,
வட்டவளை.

புத்தம் புது விடயங்களை அள்ளித்தரும் விஜய்யே! உன் பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

ச.நஸீமா, தரம்-12 (வர்த்தகம்),
விபுலானந்தா கல்.,
திருகோணமலை.

விஜய்யின் ஒவ்வொரு பிரதியையும் ரசித்துப் படிப்பதுண்டு. தற்போது விதவிதமான அறிவுத் தகவல்களைத் தந்து எம்மை வியக்க வைக்கின்றது.

இ.சிவறஞ்சினி, தரம்-8^A,
மானிப்பாய் ம.கல்.,
மானிப்பாய்.

பற்பல விடயங்களைத் தந்து, நம் கல்வி அறிவையும் வாசிப்புத் திறனையும் வளர்த்து, பரிசு மழையிலும் நனைக்கின்றாய். நம் 'விஜய்' பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

ஹஃப்ஸா ஹனீஃபா, தரம்-13 (கலை),
ஹிஸ்புல்லா ம.கல்.,
தெலியாகொன்ன.

தரம் ஏழில் உனை வாசிக்கத் தொடங்கினேன். இப்போது நீயே ஏழாவது ஆண்டில் தடம் பதிக்கின்றாய்! உனது சேவை மேலானது.

ஆ.சி.ஷிரோமினி,
தரம்-10,
திருக்குடும்ப கன்னியர் மடம்,
யாழ்ப்பாணம்.

'விஜய்' பத்திரிகையின் ஏழு ஆண்டுகாலப் பணி மிகவும் அளப்பரியது. குறிப்பாக, புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைவதற்கு மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது.

கி.நேறுஜன்,
தரம்-5, வெஸ்லி உயர்தர பாட., கல்முனை.

எம் கேள்விக்கு நீயே விடையளிக்கின்றாய்
எம் சிந்தனைக்கு நீயே விருந்தளிக்கின்றாய் - தொடர்ந்து
எம்மை அறிவுச் சிட்டுக்களாகவும் மாற்றுகின்றாய்.

ஹப்ஸா நிஸ்தார்,
தரம்-7^A, அல்-அமீன் ம.கல்.,
எலபடகம.

புதன்தோறும் தவமிருப்போம்
பதினைந்தே ரூபாவில்
புதுமைகள் கண்டிடவும்
பயன் பல பெற்றிடவும்!

ஆஷிப் ஷேக்,உயர் தரம் (கலை),
கிரி/கெக்குணுகொல்ல தே.பா.,
கெக்குணுகொல்ல.



தி/குட்டிக்கராச்சி ம.மு.பாடசாலையில் கல்வி கற்கும் எஃப்.சும்ரா, 2009 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 141 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர், எம்.ஜிஹாத்-சர்மிளா தம்பதியரின் புதல்வியாவார்.

தி/குட்டிக்கராச்சி ம.மு.பாடசாலையில் கல்வி கற்கும் எஃப்.அப்ரின், 2009 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.முஸாதிக்-கலீமா தம்பதியரின் புதல்வியாவார்.



(தகவல்: ந.மு.றுஸ்மில், கிண்ணியா-05.)

## உங்களுக்குத் தெரியுமா?

* மனிதனின் உடம்பில் உள்ள இரும்புச்சத்தை எடுத்தால், ஒரு சிறிய ஆணியைச் செய்துவிடலாம்.
* வடதுருவத்தில் 24 மணி நேரமும் தொடர்ந்து பகலாக இருக்கும் நாள் - ஜனவரி 21.
* உலகில் அதிக அளவு சிலை வடிக்கப்பட்ட மனிதர் - லெனின்.
* பயோட்டின் என்ற விற்றமின் பற்றாக்குறைதான் முடிகொட்டுவதற்கு காரணமாக இருக்கின்றது.
* உடம்பில் உள்ள பொஸ்பரஸை சேகரித்தால், சுமார் 2 ஆயிரம் தீக்குச்சிகள் செய்யலாம்.
* உடம்பில் உள்ள கொழுப்பை எடுத்தால், ஏழு சவர்க்காரக்கட்டிகள் தயாரிக்க முடியும்.



## கடற்குதிரை

கடற்குதிரையானது ஒரு வகை மீன் இனமாகும். குதிரை முகம் போன்ற தோற்றத்தில் இதன் முகம் இருப்பதாலேயே இதற்கு இந்தப் பெயர் வழங்கப்படுகின்றது. கடற்குதிரை தலையை நிமிர்த்தி நின்றபடி நீந்தும் தன்மைகொண்டது.

இதன் இனப்பெருக்க முறை விசித்திரமானது. ஆண் உடலிலுள்ள செதில் பையில்தான் பெண் மீன் முட்டையிடும். அங்கேயே குஞ்சு பொரிக்கப்பட்டு, அந்தக் குஞ்சுகளும் சிறிது காலத்துக்கு அந்தப் பையிலேயே வளரும்.

கடற்குதிரையில் 50 வகைகள் உள்ளன. வெப்ப மண்டலக் கடல்களிலேயே இவ்வகை மீன்கள் காணப்படுகின்றன. மருத்துவத் தேவைகளுக்காகவும் உணவாகவும் கடற்குதிரை பயன்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'பசி' மொழிகள்

* பசித்தவன் ருசி பார்க்கமாட்டான் - இந்தியா
* பசியுள்ள நாய் தடிக்கு அஞ்சாது - இங்கிலாந்து
* வயிற்றை ஏமாற்றவே முடியாது - சேர்பியா
* பசிக்கு ரொட்டியைத் தவிர வேறெதுவும் கண்ணில் படாது - பல்கேரியா
* பசியுள்ள குதிரை அடிப்புல்லையும் காலியாக்கிவிடும் - பிரான்ஸ்
* பசியுள்ளவர்கள் கொட்டாவி விடுகிறார்கள்; திருப்தியாக உண்டவர்கள் ஏப்பம் விடுகிறார்கள் - ரஷ்யா
* பசித்த பின் புசி - இந்தியா

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



வியாங் கல்லையைச் சேர்ந்த எம்.முன்ஸிர்-யெஸ்ரின் நஜியா தம்பதியரின் செல்வப் புதல்வி முன்ஸிர் மரியம், 20.03.2010 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளை வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



தம்பலகாமம், சிராஜ் நகரைச் சேர்ந்த பரீட்-நவ்சிலா ஆகியோரின் செல்வப் புதல்வி பாத்திமா சம்ஹா, 24.03.2010 இல் தனது இரண்டாவது பிறந்தநாளை வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று, சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.



வியாங்கல்லையைச் சேர்ந்த நிஸாக்கிர்-பஹ்மியா தம்பதியரின் செல்வப் புதல்வி ஸபியா ஸைனம், 25.03.2010 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் விமர்சையாகக் கொண்டாடவுள்ளார். இவரை உம்மா, வாப்பா மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.




யாழ்ப்பாணம்-வீரபத்திரர் வீதியைச் சேர்ந்த திருத்தணிகாசலம்-வலிநாயகி தம்பதியரின் செல்வப் புதல்வி மதுஷா, 06.03.2010 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் வீரபத்திரர் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.


(தகவல் : தி.ரேனுஜன்)

# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

### அன்னாசி



எம்.சஹீல், தரம் - 4, இனிகல மு.வித்., இனிகல.



எம்.மனால், தரம் - 5, அல்-மினா மு.ம.வித்., குருநாகல்.

### கடற்கரைக் காட்சி




பா.கபில்றாஜ், தரம் - $9^{B}$, யா/மாதகல் சென்.ஜோசப் ம.வித்., மாதகல்.



எம்.ஏ.பஸ்லத், தரம் - $10^{BG}$, அல்-மினா மு.ம.வித்., மாத்தறை.


### கப்பல்



டபிள்யூ.டிக்சித், தரம் - $6^{A}$, தம்பிலுவில் மு.ம.வித்., தம்பிலுவில்.




எஃப்.ரும்ஸா, தரம் - $7^{T}$, முஸ்லிம் ம.கல்., காலி.



ஏ.எஃப்.நவீத், தரம் - $8^{D}$, தி/கிண்ணியா ம.கல்., கிண்ணியா-03.

### கம்பளம் ஒன்றுக்கான அலங்காரம்



ப.பிரமோதினி, தரம் - $8^{D}$, இந்து ம.கல்., யாழ்ப்பாணம்.

### கோழியும் குஞ்சும்



ஆய்ஷா ஷஃபீகா, தரம் - $10^{B}$, ஆமினா பெ.தே.பாட., மாத்தளை.




நுஷ்கா நைஸர், தரம் - $9^{G}$, நளீம் ஹாஜியார் ம.கல்., சீனங்கோட்டை.

### வாத்து



எம்.நஸ்மீன், தரம் - $2^{A}$, பாத்திமா பாலிகா மு.ம.வித்., கெலிஓய.




எஃப்.சஹறா, தரம் - 3, ஆமினா தே.பாட., மாத்தளை.




## கைவண்ணங்கள் த.பெ.எண் 2037 கொழும்பு




சி.வனிதா தர்ஷனி, தரம்-$7^{B}$, இ/சீ.சீ.த.ம.வித்., பலாங்கொடை.



ஹனூபா மக்கி, தரம்-$6^{A}$, மட்/அலிகார் தே.பாட., ஏறாவூர்-$6^{D}$.



பு.துஷாயினி, தரம்-$5^{F}$, இந்து ஆ.பாட., யாழ்ப்பாணம்.



டி.பாலச்சந்திரன், தரம் - 11, விக்னேஸ்வரா ம.வித்., கடுகிதுல.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஓர் ஊரில் ஏழை விவசாயி ஒருவன் இருந்தான். அவனும் அவன் குடும்பத்தினரும் வறுமையில் வாடினர். அந்த ஊரிலிருந்த பெருஞ்செல்வந்தருக்கு அறிவுக் கூர்மையுள்ளவர்களைக் கண்டால் மிகவும் பிடிக்கும். அவரிடம் சென்றால் பொருள் உதவி ஏதும் கிடைக்குமென்று நினைத்தான் விவசாயி. அதனால், வெறுங்கையுடன் செல்லாமல் எப்படியோ முழுக்கோழி ஒன்றை வறுத்தெடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

செல்வந்தரைச் சந்தித்த அவன் தன் அன்பளிப்பாக வறுத்த கோழியைக் கொடுத்தான். மகிழ்ச்சியுடன் அதைப் பெற்றுக் கொண்ட அவர், ''விவசாயியே, உன் அன்பளிப்பிற்கு நன்றி. என் குடும்பத்தைப் பார். எனக்கு மனைவி, இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள் இருக்கின்றனர். அனைவருக்கும் இந்தக் கோழியை நீயே பங்கு பிரித்துக் கொடு'' என்று அவனிடமே கோழியைக் கொடுத்தார்.

அந்தக் கோழியின் தலையை வெட்டிய விவசாயி, ''செல்வரே, இந்தக் குடும்பத்திற்குத் தலைவர் நீங்கள்தான் அதனால் தலை உங்களுக்கு'' என்று கூறி அவரிடம் அதனைக் கொடுத்தான். பின்னர் கோழியின் இடுப்புக்குக் கீழ் உள்ள பகுதியை வெட்டினான். அதைச் செல்வரின் மனைவியிடம் கொடுத்து, ''அம்மா, நீங்கள் எப்பொழுதும் அமர்ந்தபடி வீட்டு வேலைகளைக் கவனிக்கிறீர்கள். ஆகவே, இந்தப் பகுதி உங்களுக்கு'' என்றான்.

அடுத்ததாகக் கோழியின் கால்களை வெட்டினான். செல்வரின் மகன்களிடம் ஆளுக்கொரு காலாகக் கொடுத்தான். ''நீங்கள் உங்கள் தந்தையின் நிலத்திற்குச் சென்று உழைக்கிறீர்கள். ஆகவே, இந்தக் கால்கள் உங்களுக்கு உரியது'' என்றான். பின் கோழியின் இரண்டு இறக்கைகளையும்



# விவசாயியின் அறிவுக்கூர்மை

வெட்டினான். செல்வரின் மகள்களிடம் கொடுத்து நீங்கள் திருமணத்தின்பின் வேறு வீட்டிற்குப் பறந்து செல்லப் போகிறீர்கள். அதனால், இறக்கைகளை உங்களுக்குத் தந்தேன்'' என்றான்.

''செல்வரே, நீங்கள் சொன்னபடி பிரித்துக் கொடுத்துவிட்டேன் எஞ்சிய பகுதியை நான் எடுத்துக் கொள்கிறேன்'' என்றான். கோழியின் சிறந்த பகுதிகள் அவனிடம் இருப்பதையும் பயனற்ற பகுதிகளை அவன் பிரித்துத் தந்திருப்பதையும் பார்த்தார் செல்வந்தர். அவனின் அறிவுக் கூர்மையை அறிந்து மிகவும் மகிழ்ந்தார். பின்னர், ''இந்தா உன் அறிவுக்கூர்மைக்குப் பரிசு'' என்று ஆயிரம் ரூபாவை அவனிடம் கொடுத்தார். பணத்துடன் மகிழ்ச்சியோடு வீடு திரும்பினான் அவன்.

அவனது பக்கத்து வீட்டிலிருந்த இன்னொரு விவசாயி ஒரு வறுத்த கோழிக்கு ஆயிரம் ரூபாவா? இன்றே ஐந்து வறுத்த கோழிகளுடன் செல்வந்தரைச் சந்திக்கவேண்டும். ஏராளமான பணத்துடன் திரும்பவேண்டும் என்று நினைத்தான். வறுத்த முழுக் கோழிகள் ஐந்தை எடுத்துக் கொண்டு செல்வரைச் சந்தித்தான். ''என் அன்பளிப்பாக இவற்றை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றான். மகிழ்ச்சி அடைந்த செல்வந்தர் தன் குடும்பத்தினரை அழைத்தார். அவர் மனைவியும் இரண்டு மகன்களும் இரண்டு மகள்களும் வெளியே வந்தனர்.

''விவசாயியே, நாங்கள் ஆறு பேர் இருக்கிறோம். நீ கொண்டு வந்திருக்கும் ஐந்து கோழிகளை எங்களுக்குப் பிரித்துக் கொடு'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார். ஐந்து கோழிகளை ஆறு பேருக்கு எப்படிப் பிரித்துக் கொடுப்பது என்று அவனுக்குப் புரியவில்லை திருதிருவென்று விழித்தான். தன் வேலைக்காரனை அழைத்த செல்வந்தர் நீ ஓடிச்சென்று நேற்று இங்கு வந்த விவசாயியை அழைத்து வா'' என்றார். வேலைக்காரனும் சிறிது நேரத்தில் அவனுடன் அங்கு வந்தான்.

அவனைப் பார்த்த செல்வந்தர், ''இங்கே ஐந்து கோழிகள் உள்ளன. நாங்கள் ஆறு பேர் இருக்கிறோம். எங்களுக்கு இதனைப் பிரித்துக் கொடு'' என்றார். மிக எளிது என்றான் அவன். ஒரு கோழியை செல்வந்தரிடமும் அவர் மனைவியிடமும் கொடுத்தான். ''கோழியையும் சேர்த்து நீங்கள் மூன்று பேர்'' என்றான். பின்னர் இரண்டு மகன்களிடமும் மகள்களிடமும் ஒவ்வொரு கோழிகளைக் கொடுத்தான். ''இப்பொழுது நீங்கள் மூவர்'' என்றான். ''மீதம் உள்ள இரண்டு கோழிகளையும் என்னையும் சேர்த்தால் நாங்கள் மூன்று பேர்'' என்றான். செல்வந்தரால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ''எப்படிப் பங்கு பிரித்தாலும் உனக்கு நன்மையே கிடைக்கிறது. உன் அறிவுக்கூர்மைக்கு இன்னும் ஒரு ஆயிரம் ரூபா பரிசாகப் பெற்றுக் கொள்'' என்று கொடுத்தார். இரண்டு கோழிகளுடனும் பணத்துடனும் வீடு திரும்பினான் அவன். ஏமாற்றம் அடைந்த பக்கத்து வீட்டுக்காரன் தனது பேராசையால் ஏற்பட்ட நட்டத்தை நினைத்து வருந்தியபடி தன் வீடு திரும்பினான்.

ஒருநாள் முழுக்கப் பயணம் செய்தான் இவான். மறுநாளும் பயணம் செய்தான். மூன்றாம் நாள் விடியலின்போது ராஜாளியினுடையதைவிட மிக அழகான மாளிகை ஒன்றைக் கண்டான். மாளிகைக்கு அருகே ஓர் ஓக் மரம் வளர்ந்திருந்தது. அதனது கிளையில் கழுகு ஒன்று உட்கார்ந்திருந்தது. அக்கழுகு மரத்தை விட்டுப் பறந்து வந்து தரையைத் தட்டியதும் அழகிய இளைஞனாக மாறியது.

''வா, இளவரசி ஓல்கா, எழுந்திரு. உனது அன்புச் சகோதரன் இவான் இங்கே வந்திருக்கிறான்'' என்று உரக்கக் கத்தினான்.



# அழகிய மாளிகைக்கு அருகில்

அதைக் கேட்ட இளவரசி ஓல்கா மாளிகையை விட்டு வெளியே ஓடிவந்தாள். இளவரசன் இவானின் உடல் நலத்தை விசாரித்துவிட்டு, அவள் எப்படி வாழ்கிறாள் என்பதை அவனிடம் கூறினாள். இளவரசன் இவான் அவர்களுடன் மூன்று நாட்கள் இருந்துவிட்டு, பின்னர் கூறினான்;

''இதற்கு மேல் உங்களுடன் என்னால் இங்கு தங்கமுடியாது. என் மனைவி பேரழகி இளவரசி மாரியா மரெவ்னாவை நான் தேடிப் போகவேண்டும்'' என்றான்.

கழுகு சொன்னது; ''அவளைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமாக இருக்காது. உன்னுடைய வெள்ளி முள் கரண்டியை எங்களிடம் விட்டுச் செல். நாங்கள் அதைக் காணும் போது உன்னைப் பற்றி நினைப்போம்'' என்றது.




இளவரசன் இவான் தனது வெள்ளி முள்கரண்டியை அவர்களிடம் விட்டுவிட்டுத் தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

ஒருநாள் முழுக்கப் பயணம் செய்தான். மறுநாளும் பயணம் செய்தான். மூன்றாம் நாள் விடியலின்போது அழகிலும் சிறப்பிலும் முன்னைய இரு மாளிகைகளையும் மிஞ்சக்கூடிய மாளிகை ஒன்றைக் கண்டான். மாளிகைக்கு அருகே ஓர் ஓக் மரம் வளர்ந்திருந்தது. அதனது கிளையில் அண்டங்காக்கை ஒன்று உட்கார்ந்திருந்தது.

அது ஓக் மரத்தை விட்டுப் பறந்து வந்து தரையைத் தட்டியதும் அழகிய இளைஞனாக உரு மாறியது. ''இளவரசி ஆன்னா, விரைந்து வா... உனது அன்புச் சகோதரன் இங்கே வந்திருக்கிறான்'' என்று உரக்கக் கத்தினான்.

அதைக் கேட்ட இளவரசி ஆன்னா மாளிகையை விட்டு வெளியே ஓடிவந்தாள். இளவரசன் இவானை மகிழ்ச்சியோடு வரவேற்று, அவனது உடல் நலத்தை விசாரித்துவிட்டு, அவள் எப்படி வாழ்கிறாள் என்பதை அவனிடம் சொல்லத் தொடங்கினாள்.

இளவரசன் இவான் அவர்களுடன் மூன்று நாட்கள் இருந்துவிட்டுப் பின்னர் கூறினான் ''உங்களிடம் நான் விடைபெற்றுக் கொள்ளவேண்டும். ஏனெனில், என் மனைவி பேரழகி இளவரசி மாரியா மரெவ்னாவைத் தேடிப் போகவேண்டும்''

அண்டங்காக்கை பதில் கூறியது; ''அவளைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமாக இருக்காது. உன்னுடைய வெள்ளிப் பொடி டப்பியை எங்களிடம் விட்டுச் செல். நாங்கள் அதைக் காணும்போது உன்னைப் பற்றி நினைப்போம்''

இளவரசன் இவான் தனது வெள்ளிப் பொடி டப்பியை அவனிடம் கொடுத்துவிட்டு, இருவரிடமும் விடைபெற்றுக்கொண்டு தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

மூன்றாம் நாளில் தனது அன்பு மனைவியை இளவரசன் இவான் கண்டுபிடித்தான். அவனைப் பார்த்தபோது, மாரியா மரெவ்னா கண்ணீர் விட்டுக் கதறினாள்;

''ஓ, இளவரசன் இவானே, என் பேச்சைக் கேட்காமல் மரணமற்ற கஷேய் அடைக்கப்பட்டிருந்த அறையைத் திறந்து அவனை வெளியே ஏன் போகவிட்டாய்?''

''என்னை மன்னித்து விடு மாரியா மரெவ்னா. நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும். மரணமற்ற கஷேய் எங்கும் காணப்படாத இந்நிலையில் என்னுடன் நீ வந்துவிடு. ஒருவேளை அவனால் நம்மைப் பிடிக்க முடியாது போகலாம்''

இளவரசி மரெவ்னா இளவரசன் இவானுடன் தப்பியோடினாள். மரணமற்ற கஷேய் வேட்டையாட வெளியே சென்றிருந்தான். மாலையில் அவன் வீடு திரும்பியபோது அவனது சிறந்த குதிரை தள்ளாடியது.

''ஏன் தள்ளாடுகிறாய், நோஞ்சான் குதிரையே? ஏதேனும் துரதிர்ஷ்டத்தை உணர்கிறாயா?'' எனக் கேட்டான்.

குதிரை பதில் கூறியது; ''இளவரசன் இவான் இங்கே வந்து மாரியா மரெவ்னாவைத் தூக்கிக் கொண்டு போய்விட்டான்''

''நாம் அவர்களைப் பிடிக்க முடியுமா?''

''நாம் கோதுமை விதைத்து, அது முற்றும்வரை காத்திருந்து, அறுவடை செய்து, அடித்து, மாவாக அரைத்து, ஐந்து சூட்டடுப்பு நிறைய ரொட்டிகள் சுட்டு, அவற்றைத் தின்று முடிக்கும் வரையளவு பொறுமையாக இருக்காமல் தற்போது பின்தொடர்ந்தால் நம்மால் அவர்களைப் பிடிக்கமுடியும்''

மரணமற்ற கஷேய் தனது குதிரையில் விரட்டிச் சென்று இளவரசன் இவானைப் பிடித்தான். (தொடரும்.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் கமல் மற்றும் பிரதான லிகிதர் ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.



කමල්: ආයුබෝවන් මහත්මයා.
ஆயுபோவன் மஹத்மயா.
கமல்: வணக்கம் ஐயா.

ප්‍රධාන ලිපිකරු: ආයුබෝවන්. වාඩිවෙන්න.
ஆயுபோவன். வாடிவென்ன.
பி.லிகிதர்: வணக்கம். உட்காருங்கள்.

කමල්: ස්තූතියි.
ஸ்தூதிய்.
கமல்: நன்றி.

ප්‍රධාන ලිපිකරු: ඔයා අද අලුතෙන් ආපු එක්කෙනා නේද?
ஒயா அத அலுதென் ஆபு எக்கெனா நேத?
பி.லிகிதர்: நீங்கள் இன்று புதிதாக வந்தவர்தானே?

කමල්: ඔව් මහත්මයා.
ஒவ் மஹத்மயா.
கமல்: ஆம் ஐயா.

ප්‍රධාන ලිපිකරු: මීට කලින් වැඩ කරල පළපුරුද්ද තියෙනවාද?
மீட களின் வெட கறல பளபுருத்த தியெனவாத?
பி.லிகிதர்: இதற்கு முன்பு வேலை செய்த அனுபவம் இருக்கின்றதா?

කමල්: ඔව් මහත්මයා.
ஒவ் மஹத்மயா.
கமல்: ஆம் ஐயா.

ප්‍රධාන ලිපිකරු: මෙතැන වැඩ අමාරු නැහැ. හොඳින් පුහුණුවුණාම හරි ලේසියි. හැබැයි වගකීමෙන් වැඩ කරන්න ඕනේ.
மெதன வெட அமாரு நெஹெ. ஹொந்தின் புஹுனுவுனாம ஹரி லேசிய். ஹெபெய் வககீமென் வெட கறன்ன ஓனே.
பி.லிகிதர்: இங்கே வேலைகள் கடினமானதாக இல்லை. நன்றாக பயிற்சி பெற்றால் மிகவும் இலகு. ஆனால், பொறுப்பாக வேலை செய்யவேண்டும்.

උදේ අටට වැඩට ඉන්න ඕනේ.
உதே அடட வெடட இன்ன ஓனே.
காலை எட்டு மணிக்கு வேலைக்கு வரவேண்டும்.

දහවල් දොළහයි තිහට කෑම පැය.
தஹவல் தொலஹய் திஹட கேம பெய.
பகல் பன்னிரெண்டு முப்பது மணிக்கு பகலுணவு வேளை.

සවස හතරයි තිහට වැඩ අවසන්. පුහුණුව ඉවරවෙනකම් හැමදාම වැඩට එන්න ඕනේ.
சவச ஹதறய் திஹட வெட அவசன். புஹுனுவ இவரவெனகம் ஹெமதாம வெடட என்ன ஓனே.
மாலை நான்கு முப்பது மணிக்கு வேலை முடிவடையும். பயிற்சி முடியும் வரை ஒவ்வொரு நாளும் வேலைக்கு வரவேண்டும்.

කමල්: හොඳයි මහත්මයා. මම හැමදාම වැඩට එන්නම්.
ஹொந்தய் மஹத்மயா. மம ஹெமதாம வெடட என்னம்.
கமல்: நல்லது ஐயா. நான் ஒவ்வொரு நாளும் வேலைக்கு வருகிறேன்.

ප්‍රධාන ලිපිකරු: ඔයා අතන වාඩිවෙන්න. මම ඔයාට වැඩ කියලා දෙන්නම්.
ஒயா அதன வாடிவென்ன. மம ஒயாட வெட கியலா தென்னம்.
பி.லிகிதர்: நீங்கள் அங்கே உட்கார்ந்திருங்கள். நான் உங்களுக்கு வேலை சொல்லித் தருகின்றேன்.

## பயிற்சி

**கீறிட்ட இடங்களை நிரப்புக.**

1. ඔයා ...................... ආපු එක්කෙනාද?
2. මෙතන ............... අමාරු නැහැ.
3. දහවල් ..................... කෑම පැය.
4. උදේ ................ වැඩට ඉන්න ඕනේ.
5. මම ඔයාට ................... කියල දෙන්නම්.






**He, She, It** முதலான பிரதிப் பெயர்ச்சொற்களை (Pronouns) எழுவாய் பகுதியில் கையாண்டு அமைக்கப்பட்ட, இறந்தகால தனி வாக்கியம் மற்றும் நிகழ்கால தனி வாக்கியம் ஆகிய இரண்டு வகை வாக்கியங்களிலும் காணப்படுகின்ற, எதிர்மறை நிலையில் உள்ள (Negative) வாக்கியங்களை இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

| Past Simple Tense<br>இறந்தகால தனி வாக்கியம் | Present Simple Tense<br>நிகழ்கால தனி வாக்கியம் |
|---|---|
| (அ) He did not come.<br>அவன் வரவில்லை. | (ஆ) He does not come.<br>அவன் வருவதில்லை. (ஆண்பால்) |
| (இ) She did not come.<br>அவள் வரவில்லை. | (ஈ) She does not come.<br>அவள் வருவதில்லை. (பெண்பால்) |
| (உ) It did not come.<br>அது வரவில்லை. | (ஊ) It does not come.<br>அது வருவதில்லை. (ஒன்றன்பால்) |

(அ) He did not come here yesterday.
அவன் நேற்று இங்கே வரவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஆ) He does not come here everyday.
அவன் ஒவ்வொரு நாளும் இங்கு வருவதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

(இ) She did not come to the library yesterday.
அவள் நேற்று நூலகத்துக்கு வரவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஈ) She does not come to the library everyday.
அவள் ஒவ்வொரு நாளும் நூலகத்துக்கு வருவதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

(உ) It did not come home last night.
அது கடந்த இரவு வீட்டுக்கு வரவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஊ) It does not come home everyday.
அது ஒவ்வொரு இரவிலும் வீட்டுக்கு வருவதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

✱ மேலும் சில வாக்கியங்கள் இதோ;

(அ) Ranjan did not come here yesterday.
ரஞ்ஜன் நேற்று இங்கே வரவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஆ) Ranjan does not come here everyday.
ரஞ்ஜன் ஒவ்வொரு நாளும் இங்கே வருவதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

(இ) Lalitha did not come to the church yesterday.
லலிதா நேற்று தேவாலயத்துக்கு வரவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஈ) Lalitha does not come to the church everyday.
லலிதா ஒவ்வொரு நாளும் தேவாலயத்துக்கு வருவதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

(உ) This dog did not come home last night.
இந்த நாய் கடந்த இரவு வீட்டுக்கு வரவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஊ) This dog does not come home every night.
இந்த நாய் ஒவ்வொரு இரவிலும் வீட்டுக்கு வருவதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீ.டி ரைட்டரைக் கொண்டுள்ள கணினியில் பேர்னிங் சொஃப்ட்வெயார் இல்லாமல் சீ.டி ரைட் செய்யமுடியும்.இதற்கு முதலில் வெற்று சீ.டி

# சீ.டி. ரைட் செய்வதற்கு...



## 'பேர்னிங்' மென்பொருள் இல்லாமல் விண்டோஸ் எக்ஸ்பி யில் சீ.டி. ரைட் செய்யமுடியுமா?

ஒன்றை ரைட்டரினுள் செலுத்துங்கள். பின்னர் my computer ஐ open செய்து தேவையான ஃபைல்ஸ், ஃபோல்டர்ஸ் ஆகியனவற்றை copy செய்துகொள்ளுங்கள். மீண்டும் my computer அல்லது Windows Explorer பாவித்து அதனூடே தெரியும் சீ.டி ரைட்டரின் டிரைவ் ஹைக்கனில் டபள் கிளிக் செய்து open செய்யவும். இப்போது copy செய்த Files களை போஸ்ட் செய்யுங்கள். Files ready to be Written to the CD என்ற 'வின்டோஸ்' கிடைக்கப்பெறும். அதில் Write these files to CD என்பதனைக் கிளிக் செய்யவும். அப்போது தெரிவுசெய்த Files சீ.டியில் copy யாக ஆரம்பிக்கும்.

## இலங்கையில் அங்கீகாரம்பெற்ற வர்த்தக வங்கிகள்

- ஐ.சி.ஐ.சி.ஐ. ICICI வங்கி
- இந்தியன் ஓவர்சிஸ் வங்கி
- எம்.ஸீ.பீ வங்கி
- கொமர்ஷல் வங்கி
- எஃப். டீ.சி. அபிவிருத்தி வங்கி.
- டொய்ஷ் வங்கி.
- ஹொங்கொங் என்ட் ஷெங்ஹெய் பெங்கிங் கோப்பரேஷன் (எச்.எஸ்.பீ.ஸீ)
- நெஷனல் டெவலொப்மன்ட் பேங்க்
- நேஷன் டிரஸ்ட் பேங்க்
- பான் ஏஷியா பேங்க் கோப்பரேஷன்
- மக்கள் வங்கி
- யூனியன் பேங்க் ஒஃப் கலம்போ லிமிட்டெட்
- ஸ்டேன்டர்ட் சார்டட் பேங்க்
- ஸ்டேட் பேங் ஒஃப் இந்தியா
- சிட்டி பேங்க்
- ஹபீப் பேங்க் லிமிட்டெட்
- ஹட்டன் நெஷனல் வங்கி
- சம்பத் வங்கி
- செலான் பேங்க்

## ஏன்?

**நீரின் ஆழத்தில் உள்ள இரும்பைவிட நீரிற்கு வெளியே உள்ள இரும்பு விரைவாக துருப்பிடிப்பது ஏன்?**

இரும்பானது துருப்பிடிப்பதற்கு ஒட்சிசன் அவசியம். நீரில் கலக்கின்ற ஒட்சிசனின் அளவு வளியில் உள்ள ஒட்சிசன் அளவைவிட குறைவானதாகும். நீர் உள்ள பகுதியானது ஆழம் கூடிச்செல்லச் செல்ல அங்கு ஒட்சிசன் அளவு இன்னும் குறைந்துகொண்டே செல்லும். இதனால்தான் ஆழமான பகுதியிலுள்ள இரும்பு விரைவாகத் துருப்பிடிப்பதில்லை. ஆனால், வெளியே உள்ள இரும்பிற்குத் தேவையான அளவில் ஒட்சிசன் காணப்படுவதனால் அது விரைவாக துருப்பிடிக்கின்றது.




## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# புதிய சட்டத்தினால் சூகி பாதிப்பு



மியன்மார் (பர்மா) நாட்டில் ராணுவ ஆட்சியாளர்களால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஆன் சாங் சூகி அடுத்துவரும் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்கும் விதமாகவே அந்நாட்டின் ராணுவ ஆட்சியாளர்கள் புதிய சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்தியிருப்பதாக சூகி தலைமையிலான எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. அதாவது, அரசியல் கட்சிகளைப் பதிவு செய்தல் தொடர்பான புதிய சட்ட விதிகளின்படி சிறைத்தண்டனை அனுபவிக்கின்ற எவரும் எதிர்வரும் தேர்தலில் போட்டியிட முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, வீட்டுக்காவலில் சிறைத் தண்டனை அனுபவிக்கின்ற ஆன் சாங் சூகிக்கு இத்தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு தடுக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் மியன்மாரில் பொதுத் தேர்தலை நடத்த இருப்பதாக ராணுவ அரசாங்கம் கடந்த வருடம் அறிவித்திருந்தது. எனினும், தேர்தல் நடைபெறவுள்ள திகதி இன்னமும் அறிவிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



# உலகிலேயே குள்ளமான மனிதர் மரணம்

உலகிலேயே உயரம் குறைந்தவர் என்ற கின்னஸ் சாதனயை ஏற்படுத்திய ஹி பிங்பிங் என்பவர் மரணமடைந்துவிட்டார் என்ற செய்தி வெளியாகியுள்ளது. 2அடி 5 அங்குலம் மட்டுமே உயரமுள்ள பிங்பிங் இறக்கும்போது வயது 21.





சீனாவில் 1988 ஆம் ஆண்டு பிறந்த இவர் இத்தாலியில் மருத்துவமனையொன்றில் சுகவீனம் காரணமாக அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் மரணமடைந்துள்ளார். இவரது சாதனை குறித்து தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றின் ஒளிப்பதிவிற்காக இத்தாலியின் ரோம் நகரிற்கு இவர் அழைத்துச் செல்லப்பட்டிருந்தார். இந்த ஒளிப்பதிவின்போது, தனக்கு மார்பில் வலி ஏற்பட்டிருப்பதாக தெரிவித்ததையடுத்தே உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இருப்பினும், சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைந்தார்.

## அற்லஸ் கேள்வி - 248

**கேள்வி:** குள்ளமான மனிதர் பிங்பிங் பிறந்த நாடு எது?

சரியான விடை.........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 248,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 246 இன் சரியான விடை: 15 தொன்**

**பரிசு பெறுவோர்**

ஜேசுதாசன் ஜெருன்,
348, அன்புவழிபுரம்,
திருகோணமலை.

ஜே.சார்ள்ஸ்,
02, மகா ஊவா, வலப்பனை.

த.மாதங்கி,
66A, 2 ஆம் குறுக்குத் தெரு, வவுனியா.

# ஃபிஜியில் சூறாவளி

ஃபிஜி தீவுகளின் வட திசையில் வீசிய பாரிய சூறாவளியின் காரணமாக அப்பகுதியிலிருந்த வீடுகள் மற்றும் பயிர் நிலங்கள் பலத்த சேதங்களுக்கு ஆளாகியதுடன், ஆயிரக் கணக்கிலான மக்கள் இடம்பெயரவும் நேரிட்டது.



'டொமஸ்' என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்த சூறாவளியானது மணிக்கு 175 கி.மீற்றர் வேகத்தில் வீசியுள்ளது.

இதனால்,அப்பகுதி பாடசாலைகளும் மக்கள் சேவை நிலையங்களும் மூடப்பட்டதுடன் ஊரடங்கும் அமுல் படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'ரங்கிரி' மைதானத்திற்கு டெஸ்ட் அந்தஸ்து?

## ஆசியக் கிண்ணப் போட்டிகள் அனைத்தும்கூட இங்குதான் நடத்தப்படுமாம்

இந்த வருட இறுதியில் இலங்கைக்கு வரவுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி இலங்கை அணியுடன் டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளமை நாம் அறிந்ததே. இதன் போது, 'ரங்கிரி தம்புள்ள' மைதானத்திலும் டெஸ்ட் போட்டியொன்று நடத்தப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரில் முதலாவது போட்டியே ரங்கிரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக கூறப்படுகின்றது. எனினும், இன்னமும் இது உறுதி செய்யப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது. இருப்பினும், மேற்கிந்திய தீவுகள் அணியுடனான போட்டி கால அட்டவணையின்படி ஒருநாள் போட்டிகள் இரண்டு அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளதுடன், டெஸ்ட் போட்டிகளை நடத்துவதற்கு தம்புள்ளையும் கொழும்பு நகரமும் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளமையால் தம்புள்ள 'ரங்கிரி' மைதானத்தில் போட்டி நடைபெறுவதற்கான சாத்தியம் இருப்பதாகவே தெரிவிக்கப்படுகின்றது.

2001 ஆம் ஆண்டில் இங்கிலாந்திற்கும் இலங்கைக்குமிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி ரங்கிரி மைதானத்திலேயே நடத்தப்பட்டிருந்தபோதிலும் இதுவரையில் அந்த மைதானத்தில் டெஸ்ட் போட்டியொன்று நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, ஜூன் மாதம் இலங்கையில் நடத்தப்படவுள்ள ஆசியக் கிண்ணப் போட்டியில் அனைத்துப் போட்டிகளையும் (6 போட்டிகள்) குறிப்பிட்ட ரங்கிரி மைதானத்திலேயே நடத்தவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசியக் கிண்ணப் போட்டிகளையடுத்து இலங்கை, இந்தியா, நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முக்கோண போட்டித் தொடரொன்றும் நடைபெறும்.

# பெக்கமின் உலகக் கிண்ண கனவு கனவாகியே போனது



இந்த வருடம் தென் ஆபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்ட போட்டிகளில் இங்கிலாந்து அணியின் சார்பாக விளையாடும் வாய்ப்பை டேவிட் பெக்கம் இழந்துள்ளார்.

இத்தாலியில் ஏ.சி.மிலான் என்ற அணிக்காக விளையாடிக்கொண்டிருக்கையில் காலில் ஏற்பட்ட உபாதையின் காரணமாக போட்டியிலிருந்து வெளியேற வேண்டிய நிலை பெக்கமுக்கு ஏற்பட்டது.

இதனையடுத்து அவரது காலை பரிசோதித்த மருத்துவர்கள் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் அவ்வாறு அறுவை சிகிச்சை மேற்கொண்டால் குறைந்தது நான்கு மாதங்களுக்காவது ஓய்வில் இருக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

இந்த வருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால அட்டவணையின்படி இங்கிலாந்து அணியின் முதலாவது போட்டி ஜூன் மாதம் 12 ஆம் திகதி நடைபெறும். அதன்படி பார்க்கையில் பெக்கம் இப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கான ஏது நிலை இல்லையென்றே கூறப்படுகின்றது.

1996 ஆம் ஆண்டில் இங்கிலாந்து அணியின் சார்பாக உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியொன்றில் அறிமுகமாகிய பெக்கம் நாளடைவில் இங்கிலாந்து அணிக்கு இன்றியமையாத வீரராக அமைந்தார். இதன் காரணமாக 2000 ஆம் ஆண்டில் இங்கிலாந்து அணியின் தலைவரானார். 2002 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் அரையிறுதிப் போட்டி வரை தனது அணியை இவர் கொண்டு சென்றிருந்தார்.

2006 ஆம் ஆண்டு உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டியில் போர்த்துக்கல் அணியிடம் தோல்வியுற்றதையடுத்து தலைமைப் பதவியிலிருந்து விலகி சாதாரண வீரராக அணியின் சார்பாக விளையாடத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது.

# தில்ஷான் நியூசவுத் வேல்ஸ் அணியில்....?

அவுஸ்திரேலியாவின் நியூசவுத்வேல்ஸ் பிராந்திய அணியில் இடம்பெறுவதற்கு இலங்கை அணியின் திலகரட்ண டில்ஷான் தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார். இருப்பினும், இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் இறுதித் தீர்மானத்திற்காக அவர் காத்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.



இதுவரை உலகிலேயே 'டுவெண்டி டுவெண்டி' போட்டிகளில் சிறப்பைக் காட்டியுள்ள தில்ஷான் நியூஸிலாந்தின் உள்ளூர் 'டுவெண்டி டுவெண்டி' போட்டிகளில் எச்.ஆர்.வி கிண்ண போட்டியில் வட மாவட்ட அணியின் சார்பாக விளையாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மேலும், இந்தியாவில் நடைபெற்று வருகின்ற ஐ.பி.எல் போட்டிகளிலும் 'டில்லி டெயார் டெவில்ஸ்' அணியில் தில்ஷான் இடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஐ.சி.சியின் கடந்த வருட 20/20 போட்டிகளின் சிறந்த வீரருக்கான விருதையும் பெற்ற இவர், இதுவரை 63 டுவெண்டி டுவெண்டி போட்டிகளில் கலந்துகொண்டு 11 சதங்கள் உட்பட 1452 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

# அத்தபத்து சிங்கப்பூர் அணியின் பயிற்றுனராகிறார்



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான மார்வன் அத்தபத்து சிங்கப்பூர் தேசிய கிரிக்கெட் அணியின் பயிற்றுனராக நியமனம் பெற்றிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கை அணியின் சார்பாக ஏராளமான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் போட்டியிட்டுள்ள மார்வன், இலங்கை கிரிக்கெட் களத்திலிருந்து ஓய்வு பெற்ற கையோடு இந்தியாவில் கபில்தேவின் வழிகாட்டலிலான ஐ.சி.எல் போட்டிகளில் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கா ஃபுளோரிடாவில் கிரிக்கெட் போட்டிகள்



மேற்கிந்திய தீவுகளில் நடைபெறவுள்ள 20/20 உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்னர் இலங்கை அணியினர் அமெரிக்காவில் போட்டித் தொடரொன்றில் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஃபுளோரிடா மாநிலத்தில் இலங்கை நியூஸிலாந்து அணிகளுக்கிடையே 20/20 போட்டிகள் மூன்று நடைபெறவுள்ள அதேவேளை, இலங்கை-அமெரிக்க அணிகளுக்கிடையே 20/20 கண்காட்சிப் போட்டியொன்றும் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து சிம்பாப்வே செல்கின்ற இலங்கை அணி இந்தியா, இலங்கை, சிம்பாப்வே அணிகள் கலந்து கொள்ளும் முக்கோணப் போட்டியிலும் கலந்து கொள்ளவுள்ளது. இப்போட்டிகள் மே மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

முக்கோணப் போட்டிகளின் கால அட்டவணை

| | |
|---|---|
| மே 28 | - சிம்பாப்வே, இந்தியா |
| மே 30 | - இந்தியா, இலங்கை |
| ஜூன் 01 | - சிம்பாப்வே, இலங்கை |
| ஜூன் 03 | - சிம்பாப்வே, இந்தியா |
| ஜூன் 05 | - இலங்கை, இந்தியா |
| ஜூன் 07 | - இலங்கை, சிம்பாப்வே |
| ஜூன் 09 | - இறுதிப் போட்டி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதியுதவி கிடைத்தால் விண்வெளிப் பணிகளை தொடர்ந்து முன்னெடுக்கலாம்

## நாஸா அறிவிப்பு

போதிய நிதிவளம் கிடைக்கப்பெற்றால் இந்த வருடத்தின் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்குப் பின்னரும் விண்வெளி ஆய்வுகள், செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கலாம் என்று அமெரிக்காவின் நாஸா நிறுவனம் தெரிவித்துள்ளது.


சர்வதேச விண்வெளி ஆராய்ச்சிக்கூடத்தில் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்வதற்காக 'நாஸா' நிறுவனம் விண்கலங்களை அங்கு அனுப்புவதை வழமையாகக் கொண்டிருந்தது. அந்தவரிசையில் எதிர்வரும் ஏப்ரல் 5 ஆம் திகதியும் 'டிஸ்கவரி' மூலம் புதுப்பித்தல் பணியொன்று மேற்கொள்ளப்பட வுள்ளது.

இதனைத்தொடர்ந்து செப்டெம்பரில் மற்றுமொரு புதுப்பித்தல் பணியை நாஸா மேற்கொள்ளவுள்ளது. இதன்பின்னர் இப்பணியினை தொடர்ந்து முன்னெடுப்பதில்லை என்றே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விண்வெளி ஆராய்ச்சிகள் தொடர்பான பணிகளுக்காக மாதத்திற்கு 200 மில்லியன் டொலர் நிதி தேவைப்படுகின்றது. அமெரிக்காவில் அண்மையில் ஏற்பட்ட பொருளாதார சீர்குலைவின் காரணமாக விண்வெளி ஆராய்ச்சிப் பணிகளை முன்னெடுப்பது கடினமாக இருந்தமையின் காரணமாகவே, இந்த வருடத்துடன் இப்பணிகளை நிறுத்திக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், உரிய தருணத்தில் குறித்த நிதியுதவியை வழங்குவதற்கு அமெரிக்க அரசு முன்வந்தால் விண்வெளிப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படலாம் என்றும் நாஸா அறிவித்துள்ளது.




# விண்வெளிக்கு உயிரினங்களை ஈரான் அனுப்பியது





ஈரான் அண்மையில் விண்வெளிக்கு ரொக்கெட் ஒன்றை அனுப்பியுள்ளது. இந்த ரொக்கெட்டில் ஓர் எலியையும் இரண்டு ஆமைகளையும் சில புழுக்களை யும் அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

பத்து அடி நீளமான அந்த ரொக்கெட்டுக்கு 'கவோஷ்கர்-3' என்று பெயர் வைத்துள்ளனர்.

விண்வெளிக்கு ரொக்கெட் ஒன்றை அனுப்பியதன் மூலம் விண்வெளித் தொழில்நுட்ப போட்டியில் ஈரான் மேற்கத்திய நாடுகளை தோற்கடிக்க முடியும் என்பதை வெளிக்காட்டுவ தாக ஈரான் ஜனாதிபதி தெரிவித்துள் ளார். அத்துடன், கடந்த ஆண்டில்தான்



உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப செயற்கைக்கோ ளொன்றை பூமியின் சுற்றுப்பாதைக்கு ஈரான் அனுப்பி வைத்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.



# வளிமண்டலத்தில் நுழைந்து வெடித்துச் சிதறிய செய்மதி

மத்திய மெக்ஸிகோவின் ப(ச்)சூகா என்ற கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அண்மையில் பாரிய வெடிப்புச் சத்தத்துடன் வான்பரப்பில் தீப்பிழம்பொன்றைக் கண்டு பெரும் அச்சம் அடைந்தனர். இந்நிகழ்வால் மத்திய மெக்ஸிகோ எங்கும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனை ஆராய்ந்ததில் விண்வெளியில் நிலைகொண்டிருந்த பழைய செய்மதி ஒன்று புவியின் வளிமண்டலத்தில் நுழைந்து-தீப்பிடித்து எரிந்து-வெடித்துச் சிதறியமையே இந்த நிகழ்வுக்கு காரணம் எனத் தெரியவந்தது. ரஷ்யாவுக்குச் சொந்தமான பழைய செய்மதியொன்றே இவ்வாறு வெடித்துச் சிதறியுள்ளதாக மெக்ஸிகோ விண்வெளி நிலையத்தின் விஞ்ஞானியான பெர்ணான்டோ தெலா பேனோ என்பவர் கூறியுள் ளார். ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்புத் திணைக்களமும் அதனை உறுதி செய்துள்ளது.

'கொஸ்மோஸ் 2421' எனும் பெயரில் அழைக்கப்பட்ட உளவு பார்க்கும் செய்மதியே இவ்வாறு வெடித்துச் சிதறியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதம்தான் இந்த செய்மதி விண்வெளிக்கு ஏவப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விண்கல்லால் ஏற்பட்ட பிரச்சினை

பூமியில் அவ்வப்போது விண்கற்கள் (எரிகற்கள்) விழுவதுண்டு. அளவில் சிறிய சில விண்கற்கள் பூமியை நோக்கி வரும் வழியிலேயே சிதைந்து அழிந்து விடுவதும் உண்டு. சில பூமியில் விழுந்து சிதைவதும் உண்டு. அதுவே பெரிய





விண்கல்லாக இருந்தால் பூமியில் பாரிய பாதிப்புகளையும் ஏற்படுத்திவிடும். அவ்வாறான பெரிய விண்கற்கள் முன்னைய காலங்களில் விழுந்ததால் பல பாதிப்புகளைப் பூமி சந்தித்திருக்கின்றது.

இதுவரை காலமும் பூமிக்கு விண்கல்லால் பாதிப்புகள் ஏற்பட்டதே தவிர, அதற்காக சண்டை ஏற்பட்ட தில்லை. எனினும், அண்மையில், ஒரு சிறிய பந்து அளவிலான விண்கல் விழுந்ததில் மனிதர்களுக்கிடையில் சண்டை ஏற்பட்டுள்ளது. அமெரிக் காவின் வேர்ஜீனியா மாநிலத்திலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

வேர்ஜீனியா மாநிலத்தில் உள்ள ஒரு மருத்துவமனையின் மாடியில் கடந்த ஜனவரி 18 ஆம் திகதி ஒரு சிறிய விண்கல் விழுந்துள்ளது. 'டென்னிஸ்' பந்தளவிலான அந்த விண்கல்லை மருத்துவமனை வைத்தியர்கள் இருவர் 5 ஆயிரம் டொலருக்கு ஒரு நிறுவனத்திற்கு விற்றுள்ளனர். நாளடைவில் அந்த விண்கல் தேசிய பொருட்காட்சிய கத்தில் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.

சில தினங்கள் கழிந்தநிலையில், அந்த மருத்துவமனை நிர்வாகத்தினர், குறித்த எரிகல்லை அதிக விலைக்கு விற்கும் எண்ணத்துடன் எரிகல் தங்களுக்கே சொந்தம் என்று கூறி, உரிமைப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இதற்கிடையில், தேசிய பொருட்காட்சியகத்தினுள் நுழைந்த கொள்ளையர்கள் அந்த விண்கல்லில் ஒரு பகுதியை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். ஆக, எஞ்சியுள்ள விண்கல் பெரிய சர்ச்சையை ஏற்படுத்திவிட்டது.


உரிமை கோரும் மருத்துவமனை நிர்வாகத்தினர் எஞ்சியிருக்கும் விண்கல்லையேனும் பெற்றுக்கொள் வதற்காக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். இறுதியில் இயற்கை நிகழ்வால் 'விண்ணில் இருந்து விழும் இயற்கைப் பொருட்கள் யாவும் அந்த இடத்தின் உரிமையாளருக்கே சொந்தம்' என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. எனினும், அது தொடர்பான பிரச்சினை இன்னும் தீரவில்லை என்றே தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக




## பொருத்தமற்ற உருவில் வட்டமிடுங்கள்




## வழி காட்டுங்கள்







**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.03.31 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 253**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 250 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
சி.கோபிஷன், தரம் - 5[P],
மட்/த.புனிதவளனார் ம.வித்., தன்னாமுனை.

**போட்டி: 02**
ஜெரோன் நாகராஜ், தரம் - 6[B],
நீர்/பரி.ஜெட் கல்., குரன.

**போட்டி: 03**
எஃப்.ஷஸ்னா, தரம் - 10[B],
நஸ்ரியா ம.கல்., சிலாபம்.

**போட்டி: 04**
எம்.சாகீர், தரம் - 2[B],
இ/சீ.சீ.த.ம.வித்., பலாங்கொடை.

**போட்டி: 05**
ரா.உஷாந்தினி, தரம் - 7[M],
யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்., புத்தூர்.

### பாராட்டுப் பெறுவோர்

- ஸ்டீஃபன், தரம்-9[B], புனித மரியாள் த.ம.வித்., கொழும்பு.
- அஸீஸா அக்பர், தரம்-11, சென்.மேரிஸ் கல்., திருகோணமலை.
- எச்.ஹிம்ஸி அகமட், தரம்-4, அல்-ஹிலால் ம.கல்., மூதூர்.
- கபாலினி ஆனந்தஜோதி, தரம்-8, கோப்பாய்.
- அ.டினேஸ், இளவாலை, யாழ்ப்பாணம்.
- ஆர்.சகுந்தலா, தரம்-9[A], நல்லாயன் ம.ம.வித்., கொட்டாஞ்சேனை.
- ஸாஜித் நைஸர், தரம்-8[A], ஸாஹிரா கல்., தர்ஹா நகர்.
- சூ.கிருபன், தரம்-8[C], வ/த.ம.ம.வித்., வவுனியா.
- எம்.ஃபஸால், தரம்-8[A], அல்-ஹிரா மு.ம.வித்., நாத்தாண்டியா.
- யே.பவுஸ்ரீனா, பண்டத்தரிப்பு.


## ஒத்தகருத்துச் சொல்லை தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக 5

*(முகில்/தாமரை/படை/சமர்/வெளிச்சம்)*


1. அம்புஜம் - ..............................
2. ஒளி - ..............................
3. போர் - ..............................
4. மேகம் - ..............................
5. சேனை - ..............................

## அறிவுக்கு விருந்து 250 விடைகள்

**போட்டி: 02**




**போட்டி: 04**




**போட்டி: 05**

1. கரடுமுரடு
2. பன்னீர்
3. உடற்பயிற்சி
4. ஒற்றையடிப்பாதை
5. தீபகற்பம்



கீழ் கொடுக்கப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப படத்தை நிறந்தீட்டுங்கள் 4

1. RED 2. PINK 3. PURPLE
4. YELLOW 5. GREEN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காட்டுக்குகை கிராமம்


உலக மக்களோடு தொடர்புகள் எதுவும் இல்லாமல் தனியான ஒரு பகுதியில் சமூகமொன்று மகிழ்ச்சியுடனும் ஒற்றுமையுடனும் வாழ்கின்றது என்றால் ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா? சீனாவில்தான் மக்கள் தொடர்பு இல்லாத ஒரு பகுதியில் இப்படியொரு சமூகம் வாழ்கிறது.


இவர்களுக்கு அண்மைக்காலம் வரை வெளியுலக மக்கள் தொடர்புகள் எதுவும் இருக்கவில்லை. சீனாவின் யுன்னான் மாகாணத்தின் ஒதுக்குப்புறமான ஓர் இடத்தில் இம்மக்கள் வாழும் பகுதி பல காலத்தின்பின் அண்மையில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. இப்பகுதி'பாமெய் கிராமம்' என்று அழைக்கப்படுகிறது. பாமெய் என்றால் இவர்கள் மொழியில் 'காட்டில் உள்ள குகை' என்று அர்த்தமாகும்.

இந்த பாமெய் கிராமத்தைச் சுற்றிலும் மலைகளால் சூழப்பட்டுள்ளது. இங்கு செல்வதென்றால் ஒரு சிறிய படகில் இருண்ட நீண்ட குகைக்குள்ளாக நதியில் பயணம் செய்யவேண்டும். குகையைக் கடந்து சென்ற பின்னர் அங்கு ஆச்சரியம் காத்திருக்கும். பச்சை பசேலெனும் மூங்கில்கள் உள்ள பழைமையான மரங்கள் அடர்ந்த சோலையொன்றில் பள்ளத்தாக்கு ஒன்று காணப்படும். இங்குதான் 'காட்டில் உள்ள குகை' எனப்படும் பாமெய் கிராமம் அமைந்துள்ளது.

இங்கு வாழும் மக்கள் சுவாங் என்னும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இங்கு எப்படிக் குடியேறினார்கள் என்பது பற்றி வரலாறு ஒன்று உண்டு. இந்த பாமெய் இன குடியிருப்பாளர்களின் முன்னோர்கள் குவாங் டொங் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

600 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு கொடூரமான நாடு கடத்தலின்போது இவர்கள் உயிர் தப்புவதற்காக ஓடிவந்தபோது அதிர்ஷ்டவசமாக இப்பகுதிக்கு வந்துள்ளனர். இந்த இடம் அமைந்திருக்கும் விதத்தைப் பார்த்து தாம் பாதுகாப்பாக மறைந்து வாழ்வதற்கு இதுவே பொருத்தமான இடம் என்று தீர்மானித்தனர். அதனையடுத்து இங்கேயே தங்கி வாழ நினைத்த இவர்கள் தமக்கு மிக நெருக்கமான நல்ல நண்பர்களையும் உறவினர்களையும் காப்பாற்றி இங்கே அழைத்து வந்துள்ளனர். அதன்பின்னர் இவர்கள் வாழ்வு இங்கேயே தொடர்ந்துள்ளது. இதனால், வெளியுலகத் தொடர்புகள் அற்றுப்போய்விட்டன. இவர்களின் வாரிசுகள் வெளியுலகத் தொடர்புகள் இல்லாமல் வாழலாயினர். அன்று முதல் வெளியுலகத் தொடர்புகள் இல்லாத பகுதியாகிவிட்டது இந்த பாமெய் கிராமம்.





காலையில் சூரியன் உதிக்கும் போது படுக்கையைவிட்டு எழும் இவர்கள் மாலையில் சூரியன் மறையும்போது படுக்கைக்குச் செல்கின்றனர். இங்கு மின்சாரம் இல்லை. அதனால், தொலைக்காட்சி, வானொலி மற்றும் மின்பாவனை உபகரணங்கள் எதுவும் இல்லை. வீதிகள், வாகனங்கள் இல்லை. தொழில் இல்லையென்றோ, எதிர்காலத்தைப் பற்றியோ இங்கு வாழ்பவர்கள் வருந்துவதும் இல்லை.

வாழ்க்கை இவர்களுக்கு இலகுவானதும் மிகச் சாதாரணமானதுமாகும்.அத்துடன், அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் அவர்களே உற்பத்தி செய்து கொள்கின்றனர். நெற்பயிர்ச் செய்கை, மீன் பிடித்தல், விவசாயம் என்பனவற்றின் மூலம் தமது ஜீவனோபாயத்தை நடத்துகிறார்கள். ஆடைகளுக்கான பருத்தி, இலவம்பஞ்சு செய்கைகளை மேற்கொண்டு நூல் நூற்று புடைவைகளை நெய்து கொள்கின்றனர். மற்றும் கல்லால் அரைப்பான் (Grinder) செய்து மா அரைத்துக் கொள்கின்றனர். சமையலுக்கான எண்ணெயையும் இவர்களே தயாரித்துக் கொள்கின்றனர்.

அதேவேளை, இவர்கள் தமது பாரம்பரிய கலாசாரத்தையும் முழுமையாகப் பேணி வருகின்றனர். இவர்கள் வாழும் வீடுகள் 'மாலன் வீடுகள்' எனப்படுகின்றன. இவர்கள் கொண்டாடும் பண்டிகைகளான பேய்த் திருவிழா (The Devil Festival),பாடல் திருவிழா (Singing Festival), எருது ஆவித் திருவிழா (Ox Soul Festival) என்பன விசேடமாக கொண்டாடப்படுகின்றன.

இவர்கள் மிகவும் அன்பும் கருணையும் மிக்கவர்களாக இருக்கும் காரணத்தால் தற்போது இங்கு வெளியுலக மக்களின் தொடர்புகள் அதிகரித்து வருகின்றன.

-ராஜா

# வீதியால் ஓடும் விண்ணில் பறக்கும் கார்



பாதையில் ஓடுவதுடன், வானில் பறக்கும் சக்தியும் வசதியும் கொண்ட பறக்கும் கார், அமெரிக்காவில் அடுத்த ஆண்டில் அறிமுகமாகிறது.

ஆனால், விலைதான் அதிகம். அதாவது, இதன் விலை ஒரு கோடி ரூபா. வீதியில் மணிக்கு 65 மைல் வேகத்தில் ஓடக்கூடிய அதே நேரத்தில் வானிலும் பறக்கும் சக்தி கொண்ட இந்தக் காரை அமெரிக்க நிறுவனமான 'டெர்ராபூகியா' தயாரித்து வருகிறது. அதற்கு 'டிரான்சிஷன் ரோடபிள் ஏர்கிராப்ட்' என்று பெயரிடப்பட்டுள்ளது. அதன் மாதிரி வடிவம் தயாரிக்கப்பட்டு விட்டாலும் பல கட்ட சோதனைகள் தற்போது நடந்து வருகின்றன. எனவே, அனைத்து சோதனைகளிலும் வெற்றி கிடைத்த பின்னர் அமெரிக்க அரசின் அனுமதி பெற்று அடுத்த ஆண்டு பறக்கும் கார் அறிமுகமாக உள்ளது.

சிறிய ரக ஸ்போர்ட் ஏர்கிராப்ட் மொடலில் உள்ள பறக்கும் காரை அமெரிக்காவில் ஓட்ட, விளையாட்டுக்கான 'பைலட்' அனுமதி போதுமானது. பாதையில் ஓடும்போது அதன் இறக்கைகளை இருக்குமிடம் தெரியாமல் மடிக்க முடியும். மீண்டும் வானில் பறக்கத் தயாராகும் போது 30 வினாடிக்குள் இறக்கைகளை விரியச் செய்யலாம்.


பறக்கும் காராக இருந்தாலும் விமானக் கட்டுப்பாட்டு அறை அனுமதி பெற்று, விமான நிலையத்தின் ஓடுபாதை வழியாகவே வானில் பறக்க அனுமதிக்கப்படும். எனவே, விமான நிலையத்துக்கு இதனை கார்போல் ஓட்டி வரலாம். பின்னர் ஓடுபாதையில் இருந்து வானில் பறக்கலாம். செல்ல வேண்டிய இடத்தின் விமான நிலையத்தில் தரையிறங்கி, மீண்டும் சாலையில் பயணிக்கலாம். டிரைவர் பைலட் தவிர ஒரு பயணி மட்டுமே இந்தக் காரில் பயணம் செய்ய முடியும். மோசமான வானிலையால் விமானங்கள் பறக்க முடியாத நேரத்திலும் இந்தக் காரில் பறக்கலாம்.

# குரங்குகளின் 'மொழி!'

"வார்த்தையை அளந்து பேசு" என்று யாராவது நம்மிடம் கூறினால் கோபம் நமக்கு வந்துவிடும். மனிதர்களிடையே புழக்கத்தில் உள்ள பழமொழிதான் அது. ஆனால், நாம் அளந்து பேசுகிறோமா என்பது சந்தேகம்தான். நாம் எப்படியோ, ஆனால் குரங்குகள் அளவாகத்தான் ஒலி எழுப்புகின்றன என்கிறார்கள் ஆய்வாளர்கள். அவை ஏன் அளந்து ஒலி எழுப்புகின்றன என்பதிலும் வாழ்க்கைத் தத்துவம் அடங்கி இருக்கிறதாம்.

தைவான் நாட்டில் பர்மோசான் மக்காகு என்ற பகுதியில் உள்ள குரங்குகளை ராம்ப்டன் பல்கலைக்கழக குழுவினர் ஆய்வு செய்தனர். இதில் குரங்குகள் 35 விதமான ஒலி சைகைகளை வாழ்க்கையில் அடிக்கடி பயன்படுத்துகின்றன என்று தெரியவந்துள்ளது.

மேலும், ஒரு விசித்திரமான உண்மை என்னவென்றால், குரங்குகளின் ஒலியும் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளதாம். இதற்கு முன்பாக செய்யப்பட்ட ஆய்வுகளின்படி வரையறை செய்யப்பட்ட வழக்கத்தில் இருந்து அவற்றின் 'பாஷை' மிகவும் மாறிவிட்டது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிய மொடலைக் கொண்ட கணினிகளுக்கு பழைய மொடலைக் கொண்ட பிரின்டர்களை பொருத்துவதற்கு உரிய 'போட்' கேபிள்கள் இல்லாத நிலையில் எவ்வாறு அவற்றைப் பயன்படுத்தமுடியும்?**

# பிரின்டர்களுக்கான கேபிள்



பழைய பிரின்டர்களில் பெரலல் (Parallel) ரகத்திலான கேபிள்களே காணப்பட்டன. ஆனால், புதிய கணினிகளில் 'பெரலல்' கேபிள் மட்டுமன்றி சீரியல் (Serial) கேபிள்களும் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக USB போர்ட்ஸ் கேபிள் அமைக்கப்பட்டுள்ளது. இதுதான் சிக்கலை ஏற்படுத்துவதாக உள்ளது. எனவே, இந்த சிக்கலைத் தீர்ப்பதற்காகவே விசேடமாக தயாரிக்கப்பட்ட கேபிள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 'யூ எஸ் பி டு பெரலல்' என்ற பெயரிலான பிரின்டர் கேபிளாகவே இது அறிமுகமாகியுள்ளது.

இதனை சந்தையில் விலைக்கு வாங்கமுடியும். இந்த கேபிளின் ஒருமுனை 'பெரலல் போட்'டுக்கு பொருந்தக்கூடிய வடிவிலும் மறுமுனை 'யூ எஸ் போட்'டுக்கு பொருந்தக்கூடிய வடிவிலும் அமைக்கப்பட்டுள்ளமையே இதன் சிறப்பம்சமாகும்.

## கணினி சந்தேகங்கள்



**கணினியின் நேரத்தையும் திகதியையும் சரியாக அமைத்தாலும் Shut down செய்த கணினியை மீண்டும் Log on செய்யும்போது குறித்த திகதியும் நேரமும் பிழையாகக் காணப்படும். ஏன் இவ்வாறு நிகழ்கின்றது?**

# கணினி நேரத்தை தவறாகக் காட்டுகின்றதா?






முதலில் கணினியின் நேர அமைப்பானது (நேர வலயம்-Time Zone) நமது நாட்டிற்குரிய வகையில் அமைக்கப்பட்டுள்ளதா? என்பதைக் கவனியுங்கள். இதற்கு Start Control Panel ஊடாகக் சென்று அங்குள்ள Data and Time ஹைக்கனில் இரண்டு (டபள்) முறை க்ளிக் செய்யவும். அங்கு காணப்படும் Time Zone டெப் (Tab) பினை கிளிக் செய்து அங்குள்ள டைம் Time Zone ஐ நமது நாட்டிற்கு ஏற்ப அமைத்துக் கொள்ளுங்கள். (GMT+05.30 சென்னை, கொல்கொத்தா நேர டைம் ஸோன்தான் இலங்கைக்கு பொருத்தமானது)

இவ்வாறு நேரம் அமைக்கப்பட்ட பின்னரும் கணினியை Log on செய்யும் ஒவ்வொரு தடவையும் தொடர்ந்தும் நேரம் தவறாகவே காட்டப்படுமாயின், கணினியின் 'சீமோஸ்' (Cmos) பெற்றரி செயலிழந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

கணினியின் மதர்போர்ட்டில் (Mother Board) திகதி, நேரம் ஆகியனவற்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்கு கடிகாரமொன்று உள்ளது. கணினியின் மின் இணைப்பு துண்டிக்கப்படும் சந்தர்ப்பங்களில்கூட இந்தக் கடிகாரம் தொழிற்படும். கணினியில் காணப்படுகின்ற Cmos என்ற பற்றரியிலிருந்து மின்சாரத்தைப் பெற்றே இந்தக் கடிகாரம் இயங்குகின்றது. எனவே, இந்த பற்றரி செயலிழந்து விட்டதென்றால் கடிகாரம் தொழிற்படாது. அப்படியான சந்தர்ப்பத்தில் சரியான நேரத்தைக் கணினி காட்டாது. எனவே, Cmos பற்றரியை மாற்றுவதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, மார்ச் மாதம் 24 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No.8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday March 24, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org